# வணக்கம் தமிழகம்

Email: thillaikural@gmail.com

RNI No. APTAM/2012/45644

Vanakkam Tamizhagam

தினசரி காலை நாளிதழ்
Daily Morning News Paper

* சென்னை ** மதுரை | * மலர். 6 | * இதழ் . 9 | * வெள்ளிக்கிழமை 3 ஜனவரி 2025 | * 8 பக்கங்கள் | * விலை ரூ. 5

* Chennai ** Madurai | * Volume No. 6 | * Issue No . 9 | * Friday 3 January 2025 | * 8 Pages | * Rs.5


# மார்க்சிஸ்ட் கட்சிக்கு திமுக அமைச்சர் கண்டனம்

## கூட்டணியில் மோதலா ? - விரிசலா ?

சென்னை :

அரசுப் பள்ளிகளை தனியாருக்கு தாரை வார்ப்பதாகக் கூறி, தமிழக அரசுக்கு கண்டனம் தெரிவித்த மார்க்சிஸ்ட் கட்சி மாநில செயலாளர் பாலகிருஷ்ணனுக்கு கண்டனம் தெரிவித்துள்ள பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மகேஷ், அரசு பள்ளிகள் தனியாருக்கு தரப்படாது என்றும் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் தி.மு.க., கூட்டணியில் மார்க்சிஸ்ட் கட்சி இடம் பெற்றுள்ளது. அதன் மாநில செயலாளர் பாலகிருஷ்ணன் வெளியிட்ட அறிக்கையில்,'அரசுப் பள்ளிகளை, தனியார் பள்ளிகளோடு இணைக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக, 500 பள்ளிகளை தத்து கொடுக்கும் நடவடிக்கையை, தமிழக அரசு உடனடியாக கைவிட வேண்டும்' என்று கூறியிருந்தார். தனியாருக்கு தாரை வார்க்கும் முயற்சிக்கு கண்டனம் தெரிவிப்பதாகவும் கூறியிருந்தார்.

ஆளும் கூட்டணியில் இடம் பெற்றுள்ள கட்சியே, இப்படி அறிக்கை வெளியிட்டது தி.மு.க.,வினருக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இது குறித்து நிருபர்கள் சந்திப்பில் அமைச்சர் மகேஷ் கூறியதாவது:




அரசு பள்ளிகளை தனியாருக்கு தத்துக்கொடுப்பதாக நான் பேசினேனா? செய்திகளின் உண்மை தெரியாமலேயே அரசியல் கட்சியினர் கண்டன அறிக்கை வெளியிடுவதா? தவறாக புரிந்து கொண்டு தாரை வார்ப்பு என விமர்சனங்கள் செய்கின்றனர். அரசு பள்ளிகளை தனியாருக்கு தாரை வார்ப்பதாக வெளியான செய்திகளை வன்மையாக கண்டிக்கிறேன். அரசு பள்ளி விவகாரத்தில் எனது தரப்பு விளக்கங் களை கேட்காமல் கண்டனம் தெரிவிக்கின்றனர்.

அரசு பள்ளிகள் எங்கள் பிள்ளை அதை யாருக்கும் தத்து கொடுக்கவில்லை. 500 அரசு பள்ளிகளை தாரை வார்த்து கொடுப்பதாக பரவும் தகவல் தவறானது. சி.எஸ்.ஆர்., நிதி மூலம் மட்டுமே அரசு பள்ளிகளை மேம்படுத்த தனியார் பள்ளிகள் முன் வந்தன. அரசு பள்ளிகளை தனியாருக்கு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

மத்திய அரசு நிதி கொடுக்காமல் கழுத்தை நெரிக்கிறது. மிரட்டல் விடுக்கிறது. மத்திய அரசின் கொள்கைகளை ஏற்றுக்கொண டால் தான் நிதி தருவோம் என மிரட்டல் விடுக்கிறார்கள். எங்கள் கொள்கைகளில் நாங்கள் தெளி வாக இருக்கிறோம். கல்வியை மாநில பட்டியலுக்கு மாற்றி விடுங்கள். எங்கள் பிள்ளைகளை நாங்களே பார்த்துக்கொள்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

கட்சி பெயரையோ, தலைவரின் பெயரையோ குறிப்பிடாமல் அமைச்சர் கண்டனம் தெரிவித்தாலும், அவர் குறிப்பிட்டது மார்க்சிஸ்ட் கட்சி தான் என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயமே. இப்படி ஒரே கூட்டணியில் இடம் பெற்றுள்ள இரு கட்சிகள், இப்படி மாறி மாறி கண்டனம் தெரிவித்துக் கொள்வது, இணையத்தில் பெரும் விவாதத்தை கிளப்பியுள்ளது.

# அரசுப் பள்ளிகளை தனியார் பள்ளிகள் தத்தெடுக்கவில்லை

## வதந்திக்கு பள்ளிகள் சங்கம் விளக்கம்

சென்னை :

அரசு பள்ளிகள் தனியார் நிர்வாகத்தின் கீழ் வழங்கப்படும் என செய்தி பரவிய நிலையில், இதுகுறித்து தமிழ்நாடு தனியார் பள்ளிகள் கூட்டமைப்பு விளக்கம் அளித்துள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு தனியார் பள்ளிகள் கூட்டமைப்பு அளித்துள்ள விளக்கம் வருமாறு : அரசு பள்ளிகளின் வளர்ச்சியில் CSR மூலம் தனியார் பள்ளிகளின் பங்களிப்பு இருக்கும் என்று தான் சொன்னோம். தமிழ்நாட்டிலுள்ள 13,000க்கும் மேற்பட்ட தனியார் பள்ளிகள் மழலையர் துவக்கப் பள்ளிகள் மெட்ரிகுலேஷன் பள்ளிகள், மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளிகள், சிபிஎஸ்இ உள்ளிட்ட இதர வாரிய பள்ளிகள் என ஒட்டு மொத்த பள்ளிகளுக்கும் பல்வேறு சங்கங்கள் இயங்கி வந்தன.

அந்த சங்கங்களை எல்லாம் ஒருங்கிணைந்து பெரும் பான்மையான சங்கங்கள் ஒன்றுகூடி தமிழ்நாடு தனியார் பள்ளிகள் சங்கம் என்ற பெயரில் ஒரு புதிய ஒரு சங்கத்தை உருவாக்கி அந்த சங்கத்தின் துவக்க விழாவிற்கு பள்ளிக் கல்வித்துறை அரசு செயலாளர், தனியார் பள்ளி இயக்குநர், தொட க்கக் கல்வி இயக்குநர் மற் றும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களை வாழ்த்துரை வழங்கவும் விழாவினை துவக்கி வைக்கவும் அழைத்தோம். அவர்கள் அனைவரும் வருகை தந்து விழாவினை சிறப்பித்தார்.

அரசு பள்ளிகளில் பயின்ற நாங்கள் தான் தனியார் பள்ளிகளை நடத்தி வருகிறோம். நாம் அரசு பள்ளிகளுக்கு எந்த விதத்திலாவது பயன் பாடாக இருக்க வேண்டும் என்ற உயரிய எண்ணத்தின் அடிப்படையில் அந்த நிகழ்வின் போது பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றிய அதே தருணத்தில் வரும் கல்லியாண்டில் 500 அரசு பள்ளிகளை தேர்வு செய்து அருகாமையில் இருக்கிற தனியார் பள்ளிகள் அந்த பள்ளிகளில் பயில்கிற மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவிடும் வகையிலே நூலகங்கள் பள்ளிக்கு வர்ணம் பூசுதல், பள்ளி விளையாட்டு மைதானங்களை சுத்தப் படுத்துதல், தூய்மைப் படுத்துதல் விளையாட்டு உப கரணப் பொருட்களை வாங்கிக் கொடுத்தல், மாணவர்களுக்குத் தேவையான இதர General knowledge என்று சொல்லக் கூடிய பொது அறிவு வளர்ச்சிக் கான புத்தகங்கள் வாங்கிக் கொடுத்தல், அதற்கான பொருட் கள் வாங்கிக் கொடுத்தல், கணிணி உள்ளிட்ட கண்டுபிடிப் புகள் சம்பந்தப்பட்ட நவீன பொருட்களை வாங்கிக் கொடுத் தல் என்று பலவேறு வகையிலே உதவிட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப் படையில் மாண வர்களின் வளர்ச்சிக் காக அரசு பள்ளி



களின் உட்கட்டமைப்பை மேம்படுத்த CSR மூலம் தனியார் பள்ளிகளில் பங்களிப்பு இருக்கும் என்று தான் சொல்லப்பட்டதே தவிர எந்த இடத்திலும் அரசு பள்ளிகளை தத் தெடுப்போம் என்று நாங்களும் சொல்ல வில்லை தத்தெடுப் போம் என்று அமைச் சர் உள்ளிட்ட அதிகாரி பெருமக்கள் யாரும் சொல்லவில்லை.

அது சொல்லப் படாத ஒரு வார்த் தையை அர சியலாக்கி தனியார் பள்ளிகள் அரசு பள்ளிகளை தத்தெடுக் கிறதா? என்று கேட்பது உண்மையாகவே 500 பள்ளிகளுக்கு CSR மூலம் உதன தயராக உள்ளோம் என்று சொன்ன தனியார் பள்ளி தாளாளர்களுடைய அந்தப் பெருந்தன்மையை கொச்சைப் படுத்துவதாக உள்ளது. ஆகவே தயவுகூர்ந்து இதை சரியாக புரிந்து கொள்ள வேண்டும் என்று தமிழ்நாடு தனியார் பள்ளிகள் சங்கத்தின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

# பெண் அதிகாரம் என்ற மாற்றத்தை நோக்கி தமிழகம்: முதல்வர் ஸ்டாலின்



சென்னை :

பெண் அடிமை என்ற நிலையில் இருந்து பெண் அதிகாரம் என்னும் மாற்றத்தை நோக்கி சென்று கொண்டிருப்பதாக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை சைதாப்பேட்டையில் மகளிர் திறன் மேம்பாடு மையத்தை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்த மையத்தின் மூலம் 18 வயது முதல் 40 வயதுடைய பெண்கள் வேலை வாய்ப்பு, சுய தொழில் செய்வதற்கு இந்த மையம் உதவும் என்று சொல்லப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: அண்ணா, கருணாநிதி வழியில், ஈ.வே.ராவின் கனவை நினைவாக்கும் விதமான திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. அரசுப் பணிகளில் மகளிருக்கு இடஒதுக்கீடு, மகளிர் சுய உதவிக்குழுக்கள், சொத்தில் பெண்களுக்கு சமஉரிமை உள்ளிட்ட திட்டங்களை உதாரணமாக சொல்லலாம்.

பெண்கள் கல்வி அறிவை பெற வேண்டும் என்பதன் அடுத்த கட்டமாக, பெண்கள் உயர்கல்வி உறுதி செய்யும் விதமான திட்டங்களை உறுதி செய்து வருகி றோம். விடியல் பயணத் திட்டம், புது மைப் பெண் திட்டம், தோழி விடுதி உள்ளிட்ட திட்டங்கள் உள்ளன. பெண் கள், அதிகாரம், உலக அறிவை பெற வேண்டும் என்பதற்காகத் தான் இது போன்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம். பெண்கள் உயர்ந்தால் தான் ஒரு சமூகமே உயர்ந்து நிற்கும்.

பெண் அடிமை என்ற நிலையில் இருந்து பெண் அதிகாரம் என்னும் மாற்றத்தை நோக்கி சென்று கொண் டிருக்கிறோம். கொளத்தூரில் அனிதா அச்சீவர்ஸ் அகாடமி எனும் பெயரில் திட்டத்தை தொடங்கி, பெண்களுக்கு திறன் மேம்பாட்டு வளர்ச்சி பணிகளை கொடுத்து வருகிறோம், எனக் கூறினார்.

# பெண்களுக்கு பாதுகாப்பு கேட்டு போராடினால் கைதா?: அன்புமணி கண்டனம்

சென்னை :

பெண்களுக்கு பாதுகாப்பு கேட்டு போராடினால் கைது செய்வதா? அண்ணா பல்கலை. சிக்கலில் திமுக அரசை குற்ற உணர்வு உறுத்துகிறதா? என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் அன்புமணி ராமதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அன்புமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட விவகாரத்தில் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நீதி வழங்க வேண்டும்; தமிழகத்தில் அனைத்துப் பெண்களுக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி சென்னையில் போராட்டம் நடத்த முயன்ற பசுமைத் தாயகம் அமைப்பின் தலைவர் சவுமியா அன்புமணி உள்ளிட்ட பாட்டாளி மகளிர் சங்கத்தினர் கைது செய்யப் பட்டுள்ளனர். பெண்களை பாதுகாக்க முடியாத திமுக அரசின் இந்த சர்வாதிகார நடவடிக்கை கண்டிக்கத்தக்கதாகும்.

மகளிருக்கு பாதுகாப்பு கேட்டு போராடிய பாட்டாளி மகளிர் சங்கத்தினரை கைது செய்வதற்கு எந்த நியாயமும் இல்லை. உலகின் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் ஒன்றாகப் போற்றப்படும் அண்ணா பல்கலைக் கழகத்தில் அப்பாவி மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டிருக்கிறார். பாதிக்கப்பட்ட அந்த பெண்ணுக்கு நீதி பெற்றுத் தர வேண்டிய தமிழக அரசும், காவல்துறையும் அந்த கொடுங்குற்றத்தில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை பாதுகாக்க முயல்கின்றன.

# அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு பொங்கல் போனஸ் அறிவிப்பு

சென்னை:

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழக அரசின் 'சி' மற்றும் 'டி' பிரிவு பணியாளர்களுக்கு மிகை ஊதியம் வழங்குவதற்காக 163.81 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: 20232024 ஆம் ஆண்டுக்கான 'சி' மற்றும் 'டி' பிரிவு பணியாளர்களுக்கு மிகை ஊதியம், 'சி' மற்றும் 'டி' பிரிவைச் சார்ந்த ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்கள் மற்றும் முன்னாள் கிராம அலுவலர்களுக்கு பொங்கல் பரிசு வழங்கிட163.81 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் செயல்படுத்தி வரும் நாட்டுக்கே வழி காட்டக்கூடிய பல முன்னோடி நலத் திட்டங்களை கடைக்கோடித் தமிழருக்கும் கொண்டு சேர்த்திட அயராது உழைத்திடும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, 2023-2024ஆம் ஆண்டுக்கான மிகை ஊதியம் மற்றும் பொங்கல் பரிசு வழங்கிட 163 கோடியே 81 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார்.

இந்த உத்தரவின்படி, 'சி' மற்றும் 'டி' பிரிவைச் (C & D Group) சார்ந்த பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ரூபாய் 3,000 என்ற உச்சவரம்புக்குட்பட்டு மிகை ஊதியம் வழங்கப்படும். தொகுப்பூதியம், சிறப்புக் கால முறை ஊதியம் பெறும் பணியாளர்கள், மற்றும் 2023 2024ஆம் நிதியாண்டில் குறைந்தபட்சம் 240 நாட்கள் அல்லது அதற்கு மேலாகப் பணிபுரிந்து சில்லரைச் செலவினத்தின் கீழ் மாத அடிப்படையில் நிர்ணயிக்கப் பட்ட ஊதியம் பெறும் முழுநேர மற்றும் பகுதி நேரப் பணியாளர்கள் ஆகியோருக்கு ரூபாய் 1,000 சிறப்பு மிகை ஊதியம் வழங்கப்படும்.

"சி" மற்றும் "டி" பிரிவைச் சார்ந்த ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள், முன்னாள் கிராம பணியமைப்பு (முன்னாள் கிராம அலுவலர்கள், கிராம உதவியாளர்கள்) மற்றும் அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் ஆகியோருக்கும் ரூபாய் 500 பொங்கல் பரிசாக வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



## திருவள்ளூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில்

# ரூ.6.85 லட்சம் மதிப்பீட்டில் கலைஞரின் நூற்றாண்டு நினைவு நுழைவு வாயிலை அமைச்சர் சா.மு.நாசர் திறந்தார்

திருவள்ளூர் :

திருவள்ளூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஒன்றிய பொது நிதியிலிருந்து ரூ.6.85 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கலைஞரின் நூற்றாண்டு நினைவு நுழைவு வாயிலை அமைச்சர் சா.மு. நாசர் , மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த.பிரபு சங்கர், தலை மையில் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ. கிருஷ்ண சாமி , மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் வை. ஜெயக்குமார் , திருவள்ளூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலை வர் ஜெயசீலி ஜெயபாலன் ஆகியோர் முன்னிலையில் திறந்து வைத்தார்.




இந்நிகழ்வில் ஒன்றிய குழு துணைத் தலைவர் பர்கத்துல்லா, மாவட்ட ஊராட்சி உறுப்பி னர்கள் தென்னவன், இந்திரா பொன் குணசேகரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குண சேகரன் ரவி, வட்டாட்சியர் வாசுதேவன் மற்றும் ஊராட்சி ஒன்றிய குழு வார்டு உறுப்பி னர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வணக்கம் தமிழகம் தலையங்கம்

# ஜல்லிக்கட்டு

தென்மாவட்டங்களில் ஜல்லிக்கட்டு போட்டிகள் விறுவிறுப்பாக நடக்கும்.இதற்கான ஏற்பாடுகளும் மாவட்ட நிர்வாகம் சார்பில் செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பாக, பொங்கலன்று (ஜன.14) மதுரை அவனியாபுரம், மாட்டுப்பொங்கலன்று (ஜன.15) பாலமேடு, ஜன.16ம் தேதி உலக பிரசித்தி பெற்ற அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு போட்டிகள், தென்மாவட்டங்களில் மஞ்சு விரட்டு உள்ளிட்ட போட்டிகள் வெகுவிமர்சையாக நடத்தப்படும். போட்டிகளை காண தமிழகம் மட்டுமின்றி, வெளிநாட்டினரும் திரளாக வருவது வழக்கம்.

இதனை கருத்தில் கொண்டு கடந்த ஒரு வாரமாக ஜல்லிக்கட்டை நீதிமன்றம் மற்றும் அரசு வழிகாட்டுதலின்படி பாதுகாப்பாக நடத்திட வேண்டுமென திட்டமிடப்பட்டு பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகின்றன. இதற்காக பத்திரிகை அடித்தல், போட்டி நடக்கும் இடங்களில் பார்வையாளர்களுக்கான கேலரி, மேடை அமைத்தல் உள்ளிட்ட பணிகள் நடந்து வருகின்றன. ஒரு சில நாட்களில் ஆன்லைனில் மாடுபிடி வீரர்கள், காளைகளுக்கான முன்பதிவு நடைபெற உள்ளது.

நடப்பாண்டு நமது பாரம்பரியமான ஜல்லிக்கட்டை பார்வையிட பல்லாயிரக்கணக்கானோர் வருவதாக கூறப்படுவதால், அதற்கேற்ற வகையில் பாதுகாப்பாக நடத்திடும் பணிகள் தீவிரமடைந்துள்ளன. மறுபுறம் பொங்கல் பண்டிகையொட்டி, தமிழர்களின் பிற பாரம்பரிய விளையாட்டு போட்டிகள், கலைநிகழ்ச்சிகளும் ஆங்காங்கே களைகட்டும். திராவிட மாடல் அரசு எப்போதுமே தமிழ் மொழியின் வளர்ச்சி, பாரம் பரிய நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் என்பதால், இம்முறையும் பொங்கல் விழாக்கள் 'இனிக்கும்' என்பதில் சந்தேகமில்லை.

## ஆன்மிக வணக்கம்

# குண்டலினி யோகம்

நமது, முதுகு தண்டின் அடிப்பகுதியில், முக்கோண வடிவில் இருக்கும் ஒரு குழியில் குண்டலினி என்னும் சக்தி இருக்கிறது. இந்த சக்தி ஒரு பாம்பின் வடிவில் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஒரு பாம்பின் வடிவில் இருக்கும் இந்த சத்தி, மூன்று சுற்றாக சுற்றிக் கொண்டு, தனது வாலைத்தானே கடித்துக் கொண்டு உறங்கிக் கொண்டிருக்கிறது. ஒரு யோக சாதகன், தனது யோக பயிற்சியின் மூலமாகவும், சாதனைகளின் மூலமாகவும், படுத்துக்கிடக்கும், இந்த சக்தியை எழுப்பி, தலை உச்சியில் இருக்கும் சஹஸ்ராரம் என்ற சூட்சும யோக சக்கரத்திற்கு கொண்டு வந்து அங்கே இறைவனோடு கலந்து இன்புற்று இருக்கிறான். இந்த சாதனைக்கு பெயர் குண்டலினி யோகம்.

இப்படி அரும் பெரும் சக்தியின் பெட்டகமாக இருக்கும், குண்டலினி, சுருண்டு இருக்கும் இடம்தான் மூலாதாரம் என்று அழைக்கப் படுகிறது. இது ஒரு சூட்சும யோக சக்கரத்தின் வடிவில் முதுகுத் தண்டின் கீழே இருக்கிறது.இந்த மூலாதார சக்ரம், பூமி தத்துவத்தை குறிக்கிறது. இதற்கு அதிதேவதையாக விளங்குவது, இந்த சைலபுத்திரி துர்கை. ஆகவே தன்னை வழிபடும் சாதகனுக்கு, எளிதில் குண்டலினி யோகத்தில் சித்தி அளிக்கிறாள் இவள். இன்றும் பல சித்தர் பெருமக்கள், குண்டலினி சித்தி அடைய இவளை பூஜிக்கிறார்கள்.



புத்தாண்டை யொட்டி அஇஅதிமுக பொதுச்செயலாளரும் எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிச்சாமியை தஞ்சை நாஞ்சிக்கோட்டை ஊராட்சி கேபிள் செந்தில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.



2025 புத்தாண்டில் திமுக மாவட்ட செயலாளர் பூம்புகார் எம் எல் ஏ.நிவேதா முருகனை நேரில் சென்று சந்தித்தார்கள் நகர திமுக துணை செயலாளர் நகர மன்ற உறுப்பினர் ஏ பி எஸ் பாஸ்கர் திமுக உறுப்பினர் கவுன்சிலர் ஜெயந்தி பாபு திமுக பிரமுகர்கள் உடன் சென்றனர் மேலும்.எம்எல்ஏ விடமிருந்து வருட காலண்டருடன் வாழ்த்துக்களையும்பெற்று வந்தனர்.

# ஸ்ரீ செல்லாண்டி அம்மன் கோயில் குண்டம் திருவிழா





கோபி :

ஈரோடு மாவட்டம் கோபி வட்டம் அளுக்குளி கிராமத்தில் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ செல்லாண்டி அம்மன் கோயில் குண்டம் திருவிழா சிறப்பாக நடைபெற்றது. கடந்த டிசம்பர் 20ஆம் தேதி பூச்சாட்டுதலுடன் தொடங்கிய விழாவானது 27 ஆம் தேதி நந்தா தீபமும் ,31ஆம் தேதி மஞ்சள் காப்பு அலங்காரமும் ,கிராம சாந்தி நிகழ்வும் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து ஜனவரி 1ஆம் தேதி காலை கொடியேற்று விழாவும், அன்று இரவு குண்டம் திறப்பும் ,அதனையும் தொடர்ந்து ஜனவரி 2ம் தேதி அதிகாலை அம்மை அழைக்கப்பட்டு குண்டம் திருவிழாவானது நடைபெற்றது. திருவிழாவில் தலைமை பூசாரி செந்தில்குமார் முதலில் குண்டம் இறங்கி நிகழ்ச்சியை துவக்கி வைத்தார் அதனைத் தொடர்ந்து பூசாரி மூர்த்தியும் ,வீர மக்களான ஆண்கள், பெண்கள் ,சிறுவர், சிறுமியர்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் குண்டம் இறங்கி தங்கள் நேர்த்தி கடனை செலுத்தினார்கள்.

மேலும் ஜனவரி 3ஆம் தேதி சந்தன காப்பு அலங்காரம்,ரத உற்சவம்,ஜனவரி 4ஆம் தேதி மஞ்சள் காப்பு அலங்காரம் அன்று மாலை ரத உற்சவம் இரவு பரி வேட்டையும்,இரவு தெப்பத்தேர் நிகழ்ச்சியும் ஜனவரி 5ம் தேதி மஞ்சள் நீர் உற்சவமும் அன்று மாலை அம்பாளுக்கு அலங்கார பூஜைகள் செய்யப்பட்டு மறுபூஜை நடைபெறும் என கோயில் கமிட்டியினர் தெரிவித்தனர்.

திருவிழாவில் கோபி யூனியன் சேர்மன் மௌதீஸ்வரன், கோயில் தர்மகர்த்தா ஜெகநாதன், அளுக்குளி ஊராட்சி மன்ற தலைவர் இந்துமதி,அதிமுக ஒன்றிய பொருளாளர் பாண்டுரங்கசாமி, உட்பட ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்து அம்மன் அருள் பெற்று அன்ன தானம் அருந்தி சென்றனர்.

மேலும் காசியூர் ஜி.வெள்ளிங்கிரி சார்பில் செண்டு மல்லி 600 கிலோவில் குண்டத்தை சுற்றி மலர் அலங்காரம் செய்யப் பட்டிருந்தது. குண்டம் பாதுகாப்பு பணியில் கோபி உட்கோட்டம் காவல்துறை கடத்தூர், நம்பியூர்,ஊர்க்காவல் படையினர் மற்றும் தனியார் பாதுகாப்பு சர்வீஸ் ராஜா ஆகியோர் செய்திருந்தனர்.

# நெருங்கும் ஜல்லிக்கட்டு; களமிறங்க தயாராகும் காளைகள் பயிற்சியில் முன்னாள் அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர்





புதுக்கோட்டை :

தமிழகத்திலேயே அதிக வாடிவாசல் கொண்ட மாவட்டமாகவும், அதிக ஜல்லிக்கட்டு போட்டிகள் நடக்கும் மாவட்டமாக புதுக்கோட்டை மாவட்டம் விளங்குகிறது, இங்கு ஜனவரி மாதம் தொடங்கி மே மாதம் 31 ஆம் தேதி வரை 120க்கும் மேற்பட்ட ஜல்லிக்கட்டுக்கள் 30க்கும் மேற்பட்ட மஞ்சுவிரட்டுக்கள் 50க்கும் மேற்பட்ட வடமாடு மஞ்சுவிரட்டு ஆகியவை நடைபெறுவது வழக்கம்.

இந்த ஆண்டு முதல் ஜல்லிக்கட்டு போட்டி புதுக்கோட்டை மாவட்டம் தச்சங்குறிச்சியில் 4ம் தேதி சனிக்கிழமை தொடங்க உள்ள நிலையில் முன்னாள் அமைச்சர் டாக்டர்.சி. விஜயபாஸ்கர் தனது தோட்டத்தில் பத்துக்கு மேற்பட்ட ஜல்லிக்கட்டு காளைகளை வளர்த்து வருகிறார், இந்த நிலையில் அவர் வளர்த்து வரும் சின்ன கொம்பன், வெள்ளை கொம்பன், கொம்பன் 2, கண்ணாவரம் உள்ளிட்ட காளைகளுக்கு பயிற்சி அளிக்கும் ஒரு வீடியோவானது தற்போது சமூக வலை தளங்களில் வைரலாகி வருகிறது

பொதுவாகவே முன்னாள் அமைச்சர் டாக்டர்சிவிஜயபாஸ்கர் அவர்கள் ஜல்லிக்கட்டு விளையாட்டு, சமூகப்பணி, இளம் வீரர்களை உற்சாகப் படுத்தும் வகையில் கபடி கிரிக்கெட் போன்ற விளை யாட்டுகளை பரிசு வழங்கி துவக்கி வைத்து இளைஞர்களை கவர்ந்து வரும் வேளையில் தற்போது தனது காளைகளுக்கு பயிற்சி அளிக்கும் கூடிய ஆனது சமூக வலை தளத்திலும் இளைஞர்கள் மத்தியிலும் வைரலாக பேசப்பட்டு வருகிறது.

# திருவண்ணாமலை மாவட்டத்தில் ஏற்றுமதிக்கு வாய்ப்புள்ள அரிசி, பட்டு, உற்பத்தி பொருட்கள் மற்றும் மோட்டார் வாகன பொருட்கள் தேர்வு: மாவட்ட ஆட்சியர் தகவல்




திருவண்ணாமலை:

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன் தலைமையில் , திங்கட்கிழமை அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்டத் தொழில் மையம் சார்பில் மாவட்ட ஏற்றுமதி ஊக்குவிப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வெளிநாட்டு வர்த்தக இயக்ககம் (DGFT). இந்திய ஏற்றுமதி அமைப்பின் கூட்டமைப்பு (FIEO) ஆகியோர் காணொலி வாயிலாகவும் மற்றும் முன்னோடி வங்கி மேலாளர் (LDM) திட்ட அலுவலர், தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகம் (SIPCOT) ஆகியோர்கள் நேரடியாகவும் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது:, திருவண்ணாமலை மாவட்டத்தில் பொதுமக்களின் முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு அரசு உத்தரவின்படி மாவட்ட நிர்வாகம் தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக மாவட்டத் தொழில் மையத்தின் சார்பில் மாவட்ட ஏற்றுமதி ஊக்குவிப்புக் குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்றையதினம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருவண்ணாமலை மாவட்டத்தில் ஏற்றுமதிக்கு தேவையான பல்வேறு தகவல்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இதில் திருவண்ணாமலை மாவட்டத்தில் ஏற்றுமதிக்கு வாய்ப்புள்ள அரிசி, பட்டு, உற்பத்தி பொருட்கள் மற்றும் மோட்டார் வாகன பொருட்கள் தேர்வு செய்யப்பட்டது.

மேலும் ஏற்றுமதி விழிப்புணர்வு கருத்தரங்குடன் ஏற்றுமதி வாங்குபவர், விற்பனையாளர்கள், சந்திப்புக் கூட்டத்தையும் நடத்த முடிவு எடுக்கப் பட்டுள்ளது. இதே போன்று திருவண்ணா மலை மாவட்டத்தின் பொருளாதார முன் னேற்றத்தை அடுத்தக் கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக அரிசி, பட்டு, உற்பத்தி பொருட்கள், இயந்திர உதிரிபாகங்கள் ஏற்றுமதி செய்வதற்கு அந்தந்த உற்பத்தி நிறுவனங்களைக் கண்டறிவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மாவட்டத் தொழில் மையம் மூலம் மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மாவட்டத் தொழில் மைய பொது மேலாளர் .க.இரவி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் கௌரி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்புகள் மற் றும் அரிசி ஆலை சங்கத்தினர். தொழில் நிறுவன உரிமையாளர் கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# காட்பாடி சித்தூர் பேருந்து நிலையத்தில் ஆங்கில புத்தாண்டு கொண்டாடிய வேலூர் மாவட்ட எஸ்.பி.மதிவாணன்



வேலூர் :

வேலூர் மாவட்டம் காட்பாடி சித்தூர் பேருந்து நிலையத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணி அளவில் வருகை தந்த வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மதிவாணன் கேக் வெட்டி ஆங்கிலப் புத்தாண்டை சக காவலர்களுடன் கொண்டாடி மகிழ்ந்தார். ஆங்கிலப் புத்தாண்டை வரவேற்கும் விதமாக இந்த எளிய விழா சித்தூர் பேருந்து நிலையத்தில் நடந்தது குறிப்பிடத்தக்கது.

ஆங்கிலப் புத்தாண்டையொட்டி நடந்த இந்த நிகழ்ச்சியில் காட்பாடி காவல் துணை கண்காணிப்பாளர் பழனி, காட்பாடி காவல் ஆய்வாளர் ஆனந்தன், காட்பாடி போக்குவரத்து பிரிவு காவல் ஆய்வாளர் கோவிந்தசாமி, உதவி ஆய்வாளர் மிதிலேஷ் குமார் மற்றும் சட்டம் ஒழுங்கு உதவி ஆய்வாளர்கள் மற்றும் தனிப்பிரிவு சிறப்பு உதவி ஆய்வாளர் மற்றும் தலைமை காவலர்கள் உள்ளிட்ட போலீசார் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ஆங்கிலப் புத்தாண்டு பிறந்ததை கொண்டாடும் வகையில் இந்த கேக் வெட்டி பொதுமக்கள் மற்றும் வாகனங்களில் பயணித்த பயணிகளுக்கும் போலீசார் விநியோகம் செய்து தங்களது மகிழ்ச்சியை வெளிப் படுத்தியது குறிப்பிடத்தக்கது.

**வணக்கம் தமிழகம்**

**தலைமை அலுவலகம்:**
**(சென்னை பதிப்பு)**

எண். 24/19, 2வது மாடி, வெள்ளாள தெரு,
(பெஸ்ட் மருத்துவமனை எதிரில்),
கோடம்பாக்கம், சென்னை – 24.
அலுவலகம் : 044 – 4264 1251
செல்: 98403 80027, 98403 65027
E - Mail : thillaikural@gmail.com

**மதுரை பதிப்பு**

எண். 20, ஸ்வாமி காம்ப்ளக்ஸ் (3வது மாடி),
தேனி மெயின் ரோடு ,
அரசரடி, மதுரை – 10.

**வங்கி கணக்கு:**

VANAKKAM TAMIZHAGAM
AXIS BANK
Arcot Road Branch
Current AC No: 921020033823939
IFSC : UTIB0004594



மதுரை மாவட்டம் அவனியாபுரம் ஜல்லிக்கட்டு நடைபெறுவதை முன்னிட்டு முகூர்த்த கால் நடும் பணியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கலந்து கொண்டார். மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, மாநகர காவல் ஆணையாளர் லோக நாதன், மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த், மாநக ராட்சி ஆணையாளர் தினேஷ்குமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) த.வைஷ்ணவி பால், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன், மாநகராட்சி துணை மேயர் நாகராஜன், மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல் ஆகியோர் உடன் உள்ளனர்.

## திருவண்ணாமலை மாவட்ட

# அறிஞர் அண்ணா நெடுந்தூர ஓட்டப் போட்டி

திருவண்ணாமலை:

தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின்படி, அறிஞர் அண்ணா மாரத்தான் போட்டிக்கு இணையான நெடுந்தூர ஓட்டப் போட்டிகள் 2024ம் ஆண்டிற்கான போட்டி பள்ளி மாணவ மாணவியர் மற்றும் பொது மக்களுக்கு 05.01.2025 அன்று காலை 7.00 மணி அளவில் இருந்து பல்வேறு இடங்களில் துவங்கப்பட்டு மாவட்ட விளையாட்டு அரங்கில் முடிவடைய உள்ளது. மாவட்ட அளவிலான அறிஞர் அண்ணா மாரத்தான் போட்டிக்கு இணையான நெடுந்தூர ஓட்டப் போட்டியில் பங்கேற்றிடும் மாணவ மாணவிகர்கள் மற்றும் பொதுமக்களுக்கான வயது வரம்பு கீழ்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது

மேலும் 25 வயதிற்குமேற்பட்ட ஆண்களுக்கு மட்டும் சீனுவாச பள்ளி கோசாலை முதல் மாவட்ட விளையாட்டு அரங்கம் வரையிலும், 17வயது முதல் 25 வயதிற்குட்பட்டவர்களுக்கு ஆண்கள் மட்டும் இடிஞ்ச மண்டபம் (காஞ்சி ரோடு பிரிவு) முதல் விளையாட்டு அரங்கம் வரையிலும், 25 வயதிற்கு மேற்பட்டவர்கள் மற்றும் 17வயது முதல் 25 வயதிற்குட்பட்ட பெண்களுக்கு திருவண்ணாமலை பேருந்து நிலையம் (அவலூர்பேட்டை ரோடு பிரிவு) முதல் மாவட்ட விளையாட்டு அரங்கம் வரை நடைபெற உள்ளன.

இப்போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு முதல் பரிசு தொகையாக ரூ.5000, இரண்டாம் பரிசு தொகையாக ரூ.3000 மற்றும் மூன்றாம் பரிசு தொகையாக ரூ.2000 பரிசு தொகையும் தகுதிச் சான்றிதளும், 4 முதல் 10 இடம் வரை வெற்றி பெறுபவர்களுக்கு பரிசு தொகையாக ரூ.1000 மற்றும் தகுதிச் சான்றிதழ் வழங்கப்படும். மேலும் கூடுதல் விவரங்களுக்கு திருவண்ணாமலை மாவட்ட விளையாட்டு(ம) இளைஞர் நல அலுவலர் அவர்களை 7401703484 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன் தெரிவித்துள்ளார்.



நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம், சமய சங்கிலி அக்ரஹாரம் பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா பொங்கல் பரிசுத் தொகுப்புகளில் வழங்குவதற்காக கரும்பு தேர்வு செய்யும் பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

**VANAKKAM TAMIZHAGAM**, Owned Published by **M.RAJENDRAN**, Printed at Chennai Offset Printers, Kithabath Khan street, Ellis Road, chennai 600 002 And Published from No. 24/19, 2nd Floor, Vellala Street, (Opp. Best Hospital), Kodambakkam, Chennai 600 024. Contact. Editor **THILLAI KARTHI 9840380027**. e-mail : thillaikural@gmail.com will have Jurisdication of Chennai City Courts Only.

வணக்கம் தமிழகம்
Email: thillaikural@gmail.com
RNI No. APTAM/2012/45644



## நிறைந்தது மனம்

# விழுப்புரம் மாவட்டத்தில் 9056 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.21.90 கோடி மதிப்பீட்டில் உதவி உபகரணங்கள் வழங்கி, உதவிபுரிந்த முதலமைச்சருக்கு மாற்றுத்திறனாளிகள் நெஞ்சார்ந்த நன்றி: மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்








தமிழ்நாடு முதலமைச்சர் மாற்றுத்திறனாளிகளும் சமூகத்தின் ஓர் அங்கம் என்பதை உணர்த்திடும் வகையிலும், மாற்றுத்திறனாளிகள் பிறர் உதவியின்றி சுயமாகவும், சுதந்திரமாகவும் சமுதாயத்தில் செயல்படும் வகையில் பல்வேறு சிறப்புத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் . அதனடிப்படையில் பல்வேறு உதவி உபகரணங்களை தொடர்ந்து வழங்கிவருகிறார் . இதுமட்டுமல்லாமல், மாற்றுத்திறனாளிகள் நன்கு படித்து உயர்நிலைக்கு வர வேண்டும் என்ற உயர்ந்த நோக்கில் மாற்றுத்திறனாளிகளுக்கான கல்வி உதவித் தொகையினை உயர்த்தி வழங்கியுள்ளார் . இதுமட்டுமல்லாமல், மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகையினை உயர்த்தி வழங்கி மாற்றுத்திறனாளிகளுக்கு உறுதுணையாக செயல்பட்டு வருகிறார் .

அந்தவகையில்,விழுப்புரம் மாவட்டத்தில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில், 6808 மாற்றுத்திறனாளிகளுக்கு மாதம் ரூ.2000வீதம் 16,33,92,000 பராமரிப்பு உதவித்தொகையும்,180 கை,கால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.9,500 வீதம் ரூ.17,10,000மதிப்பீட்டில் மூன்று சக்கர சைக்கிள்களும்,155 கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.7,900 வீதம் ரூ.12,24,500மதிப்பீட்டில் சக்கர நாற்காலியும்,421 கை, கால் பாதிக்கப்பட்ட, செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு மற்றும் மனவளர்ச்சிகுன்றிய குழந்தைகளின் பெற்றோர்களுக்கு ரூ.6,840வீதம் ரூ.28,79,640 மதிப்பீட்டில் மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்களும், 301 கை கால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.96,011வீதம் ரூ.2,88,99,311மதிப்பீட்டில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களும், 31 முதுகு தண்டுவடம் பாதித்த மாற்றுத்திறனாளிகளுக்குரூ.99,777 வீதம் ரூ.30,93,087 மதிப்பீட்டில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களும், 60 தசைசிதைவு நோய் மற்றும் முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1,06,000 வீதம் ரூ.63,60,000 மதிப்பீட்டில் மின்கலனால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலியும், 500செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.4,320 வீதம் ரூ.21,60,000 மதிப்பீட்டில் நவீன காதொலிக் கருவிகளும், 600 செவித்திறன் பாதிக்கப்பட்ட மற்றும்; பார்வை குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.15,530வீதம் ரூ.93,18,000மதிப்பீட்டில் சிறப்பு செயலிகள் கொண்ட கைப்பேசிகளும் என மொத்தம் 9056 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.21,90,36,538 மதிப்பீட்டில் உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

நிறைந்தது மனம் நிகழ்வில், முதுகுத்தண்டுவடம் பாதிக்கப்பட்ட வர்களுக்கான மின்கலனால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலி பெற்றுக்கொண்ட மாற்றுத்திறனாளி பிரசாந்த் தெரிவிக்கின்றபொழுது, விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம், ஆசூர் கிராமத்தில் வசித்து வருவதாகவும் 30 வயது வரை நன்றாக இருந்து சென்ட்ரிங் வேலைபார்த்து வந்ததாகவும் பணியின் போது கீழேவிழுந்து கழுத்து எலும்பு மற்றும் முதுகுத் தண்டு வடம் பாதிக்கப்பட்டதினால் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக படுத்த படுக்கையில் இருந்து வந்ததாகவும், இதனால் மனவேதனை ஏற்பட்டு மிகுந்தசிரமத்தினை சந்தித்த சமயத்தில்தான் முதலமைச்சரின் உத்தரவின் படி, மின்கலனால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலி வழங்கப்பட்டது.

இந்தசிறப்பு சக்கர நாற்காலியினை கொண்டு பொது இடங்கள் மற்றும் நண்பர்களுடன் வெளியே செல்ல முடிகிறதுஎன்றும், வெளியில் செல்வதால் மனச்சோர்வு மற்றும் மன வேதனை இல்லாமல் தற்பொழுது வாழ்ந்து வருவதால் முதலமைச்சருக்கு நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொண்டார்,

மேலும், பார்வையற்ற மற்றும் காதுகேளாத மாற்றுத்திறனாளிக்கான பிரத்யேக செயலியுடன் கூடிய கைப்பேசியினை பெற்றுக் கொண்ட மாற்றுத்திறனாளி சதிஷ்குமார் தெரிவிக்கின்ற பொழுது, கஸ்பாகரணை மேல்தெருவில் வசித்து வருவதாகவும், 70 சதவீதம் பார்வை குறைபாடு உள்ளதாகவும், 10ஆம் வகுப்புவரை படித்து புதுவையில் தனியார் நிறுவனத்தில் தங்கிதற்காலிகமாக பணிபுரிந்து வருவதால் சொற்ப வருவாயினை கொண்டு அன்றாட வாழ்க்கை நடத்தி வருவதாகவும், பார்வை குறைபாடு காரணமாக பணி நேரத்தில் பணிக்காரணமாகவும், பெற்றோர்களிடம் பேசுவதற்கு தொலைபேசி இல்லாமல் தவித்து வந்ததாகவும், முதலமைச்சரின் உத்தரவின் படி பார்வையற்ற மாற்றுத்திறனாளிக்கான பிரத்யேக செயலியுடன் கூடிய கைப்பேசி வழங்கப்பட்டதால், எனது பணிக்கு உதவிகரமாகவும், என் பெற்றோர் மற்றும் நண்பர்களை தொடர்பு கொள்வதில் எளிதாக உள்ளதாகவும், சிறப்புசெயலியுடன் கூடிய கைப்பேசியினை வழங்கிய முதலமைச்சருக்கு நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொண்டார் .

இதுபோன்று பலதரப்பட்ட மாற்றுத்திறனாளிகள் முதலமைச்சர் வழங்கிய உதவி உபகரணங்களை பயன்படுத்தி தங்கள் அன்றாட பணிகளை பிறர் துணையின்றி மேற்கொண்டு, வாழ்வாதாரத்திற்கான பொருட்கள் ஈட்டும் சூழ் நிலைக்கு எங்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்திக் கொடுத்த முதலமைச்சருக்கு அனைத்து மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினை மனமகிழ்வுடன் தெரிவித்துக் கொண்டனர் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சி.பழனி தெரிவித்தார் .

**தொகுப்பு :**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**விழுப்புரம் மாவட்டம்.**

# சங்கரன்கோவில் புனித வளனார் தேவாலயத்தில் சமூக நல்லிணக்க புத்தாண்டு கொண்டாட்டம்



சங்கரன்கோவில் :

சங்கரன்கோவில் ராஜபாளையம் சாலையில் அமைந்துள்ள புனித வளனார் தேவாலயத்தில் வைத்து ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு சர்வ சமய சமூக நல்லிணக்க புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு அருள்திரு ஜெகன் தலைமை வகித்தார் . உதவி பங்குத்தந்தை அற்புத ஜோசப்குமார் முன்னிலை வகித்தார். சங்கரன் கோவில் தேவாலய அருட்தந்தை ஜெப அருள்ராஜ் வரவேற்றார்.

இதில் நாதகிரியை சேர்ந்த ஜோதி ராமலிங்கம், அஸ்ரத் ரசூல்மைதீன் ஆகியோர் கலந்துகொண்டு சர்வ சமய சமூக நல்லிணக்க புத்தாண்டு கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர் தொடர்ந்து இரவு 12 மணிக்கு அனைத்து சமயத்தினர் சேர்ந்து கேக் வெட்டும் நிகழ்ச்சி நடந்தது . பின்னர் சமூக நல்லி ணக்க பிரார்த்தனை நடைபெற்றது.

நிகழ்ச்சியை பங்கு நிர்வாகிகள் பெர்னான்டினோ, தம்பி சேவியர், ஆசிரியர் தவமணி, அமல்ராஜ் ஆகியோர் ஒருங்கிணைத்து இருந்தனர் . இதில் பங்கு பேரவை உறுப்பினர்கள் அன்பியர்கள், மற்றும் அனைத்து சமயத்தினர் இறைமக்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். அவர்கள் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது. முடிவில் ஆசிரியை இன்னாசியம்மாள் நன்றி கூறினார்.

# ஆற்காட்டில் மனித உரிமைகள் மற்றும் ஊழல் எதிர்ப்பு மன்றம் அலுவலக திறப்பு விழா!!



ராணிப்பேட்டை :

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காட்டில் மனித உரிமைகள் மற்றும் ஊழல் எதிர்ப்பு மன்றம் அலுவலக திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு மாவட்டத் தலைவர் நித்தியானந்தம் தலைமை தாங்கினார். மாவட்ட துணைத் தலைவர் அதில் பாஷா முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக மாநிலத் தலைவர் ஜபருல்லா ஷெரிப் கலந்துகொண்டு ரிப்பன் வெட்டி அலுவலகத்தை திறந்து வைத்து சிறப்பித்தார்.

இதில் மாவட்டத் மாவட்ட துணை தலைவர் செல்வராஜ், மாவட்ட செயலாளர் அஸ்வாக் அலி, மாவட்டச் செயலாளர் சர்பராஸ் அகமது, ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மாநிலத் தலைவர் ஜபருல்லா ஷெரிப் பேசுகையில் மனித உரிமைகளுக்கு எதிரான எந்த வித பிரச்சினையாக இருந்தாலும் அலுவலகத்தில் புகார் அளிக்கலாம் என்றும் இதற்காகவே அலுவலகம் முன்பு புகார் பெட்டி வைத்துள்ளதாகவும் புகார் அளித்தவுடன் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பேசினார்.

மாவட்டச் செயலாளராக பாரத் மற்றும் மாவட்டத் துணைத் தலைவராக எழிலரசி ஆகியோர் பதவி ஏற்று கொண்டனர். இதில் மனித உரிமைகள் மற்றும் ஊழல் எதிர்ப்பு மன்ற நிர்வாகிகள், பொதுமக்கள் என திரளானோர் கலந்து கொண்டனர்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், உம்பிளிக்கம்பட்டியில் ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டடம், அங்கன்வாடி மையம் மற்றும் நடுப்பட்டியில் அங்கன்வாடி மையம் உள்ளிட்ட புதிய கட்டடங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி முன்னிலையில் திறந்து வைத்தார்.





# HEALP TEAM INDIA CHARITABLE TRUST சார்பாக ஏழை விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டோர்க்கு நலத்திட்ட உதவிகள்

சென்னை:

சென்னை கொறுக்கு பேட்டையில் உள்ள தனியார் குடியிருப்பு வளாகத்தில் புத்தாண்டை வரவேற்க்கும் விதமாக முதலாவதாக அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. பின்னர் விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டவர்களை அழைத்து மலர்கள் மீது நடக்க வைத்து சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டது. இதில்

2000 பேர்களுக்கு புடவை மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் HEALP TEAM INDIA CHARITABLE TRUST நிறுவன தலைவர் சமூக ஆர்வலர் Dr.C. வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக குறு தேவ் மெடிக்கல் பவுண்டேஷனின் நிறுவன தலைவர் பத்திய ராஜ் ஜெயின் மற்றும் டாக்டர். மேய்ப்பால் ஜி, சஞ்சீவ் பாய், திரைப்பட சண்டை பயிற்சி இயக்குனர் ராம், ஷாக்ராத் பிரபு குமாரராஜா, ரயில்வே அந்தோணி, சமூக ஆர்வலர் நந்தா, டெக்ஸ்டைல் சதீஷ்குமார், என். எஸ்.கே என்டர்பிரைசஸ் நந்தா, இறுதியாக சமூக பாதுகாப்பு இயக்கம் Dr.A.ஆலம்ராஜ் நன்றியுரை ஆற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் வந்திருந்த சிறப்பு விருந்தினர்கள் அனைவருக்கும் சமூக ஆர்வலர் Dr.C.வெங்கடேசன் பொன்னாடை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய சமூக ஆர்வலர் Dr.C.வெங்கடேசன் பேசுகையில் இனி வரும் காலங்களில் இந்த சேவையை தொடர்ந்து செய்வோம் என்றும்

இந்த நிகழ்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக இருந்து பேர் உதவி செய்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் வருடத்தின் முதல் நாளான இன்று ஏழை தாய்மார்களுக்கு உதவ வேண்டும் என்று முடிவு செய்து 2000 பேருக்கு புடவை மற்றும் நலத் திட்ட உதவிகள் செய்ததாகவும் இனி வரும் காலங்களில் இலவச மருத்துவ முகாம் போன்ற நிகழ்ச்சிகளை நடத்த உள்ளதாகவும் தாயுள்ளத்துடன் உதவும் என்னம் கொண்டவர்கள் எங்களின் HEALP TEAM INDIA CHARITABLE TRUST மூலமாக உதவி செய்யலாம் என்று கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் பலரும் கலந்து கொண்டனர்.

# கொடைக்கானலில் புத்தாண்டு கொண்டாட வந்த பயணிகளிடம் மெத்தம்பெட்டமைன்

திண்டுக்கல்:

கொடைக்கானலில் புத்தாண்டு கொண்டாட வந்த ஐ.டி.பணியாளர்களிடம் இருந்து மெத்தம்பெட்டமைன் பறிமுதல் செய்யப்பட்டது.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் போலீசாரின் வாகன சோதனையின் போது புத்தாண்டை கொண்டாட வந்த ஐ.டி.ஊழியர்களிடமிருந்து அடிபட்ட மெத்தப்பெட்டமைன் பறிமுதல் செய்யப்பட்டன.

கேரளா பதிவு எண் கொண்ட காரில் கேரளாவை சேர்ந்த ரஞ்சிஸ்(27), நசீர்(24), ஜிஸ்ணு(22) மற்றும் அஸ்ஸாமை சேர்ந்த பிரதிக்கூஷா(25) ஆகிய 4 பேரை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். 4 பேரும் பெங்களூரில் வேலை செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**தினமும் படியுங்கள்...**
**வணக்கம் தமிழகம்**

## பொது அறிவிப்பு

**மாண்புமிகு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், உத்தமபாளையம்.**
**ந க எண் 3925/. 2024/ அ 1.நாள்: 20. 12.2024**

அனுப்புனர்;

**திரு.வேலன், த/பெ.மாரிமுத்து,**
**வார்டு.9, மாதாரி தெரு,**
**க.புதுப்பட்டி, உத்தமபாளையம் வட்டம்,**
**தேனி மாவட்டம் .. மனுதாரர்**

// எதிரிடை//

பெறுனர்

**உயர்திரு, செயல் அலுவலர் அவர்கள்,**
**பேரூராட்சி அலுவலகம், க.புதுப்பட்டி,**
**உத்தமபாளையம் வட்டம்.,**
**தேனி மாவட்டம். ... எதிர்மனுதாரர்**

மேற்கண்ட முகவரியில் வசித்து வரும் மனுதாரர் திரு வேலன் என்பவராகிய நான் எனது அக்கா காளியம்மாள் என்பவர். கடந்த 23.04.1990.ஆம் தேதி க புதுப்பட்டி கிராமத்தில் இறந்தார். இவரின் இறப்பை பதிவு செய்யக் கோரி உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் மனு செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் நாளிதழ் விளம்பரம் கண்ட 15 தினங்களுக்குள் காலை 10:30 மணிக்கு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையைத் தெரிவித்துக் கொள்ளலாம்.

**இவண்**

**மனுதாரர்.**

## பொது அறிவிப்பு

**மாண்புமிகு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், உத்தமபாளையம்.**
**ந க எண் 5025/. 2024/ அ 1. நாள் : 06. 11.2024**

அனுப்புனர்;

**திரு.மன்மதன், த/பெ.தெய்வநாதன்,**
**தம்மிநாயக்கன்பட்டி,**
**உத்தமபாளையம் வட்டம்,**
**தேனி மாவட்டம் .. மனுதாரர்**

// எதிரிடை//

பெறுனர்

**உயர்திரு, வட்டாட்சியர், அவர்கள்,**
**வட்டாட்சியர் அலுவலகம்.,**
**உத்தமபாளையம்.**
**உத்தமபாளையம் வட்டம்.**
**தேனி மாவட்டம். ... எதிர்மனுதாரர்**

மேற்கண்ட முகவரியில் வசித்து வரும் மனுதாரர் திரு மன்மதன் என்பவராகிய நான் , எனது மகன் ராகுல்என்பவர். கடந்த 15. 11. 2005 .ஆம் தேதி தம்மிநாயக்கன்பட்டி கிராமத்தில் பிறந்தார். இவரின் பிறப்பை பதிவு செய்யக் கோரி உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் மனு செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் நாளிதழ் விளம்பரம் கண்ட 15 தினங்களுக்குள் காலை 10:30 மணிக்கு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையைத் தெரிவித்துக் கொள்ளலாம்.

**இவண்**

**மனுதாரர்,**
**செல்: 79048 49129**

நிறைந்தது மனம்

# புதுக்கோட்டை மாவட்ட புதுமைப் பெண் விரிவாக்கத் திட்டத்தால் பயனடைந்த மாணவிகள் முதலமைச்சருக்கு உள்ளம் நெகிழ்ந்து நன்றிகளை தெரிவித்தனர்







தமிழ்நாடு முதலமைச்சர் பெண்களின் மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் தொடர்ச்சியாக பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார் .கல்வி கற்ற பெண்களால் மட்டுமே சமூக நீதி, சமத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கிய பொருளாதார முன்னேற்றம் அடைந்த சமுதாயத்தினரை உருவாக்கிட இயலும் என்பதை உணர்ந்த நம் முதலமைச்சர் பெண்களின் உயர்கல்விமேம்பாட்டிற்கான வரலாற்றுச் சாதனை திட்டமான புதுமைப் பெண் திட்டத்தினை 5.9.2022 அன்று தொடங்கி சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்.

தொடர்ந்து, 30.12.2024 அன்று தூத்துக்குடி, காமராஜ் கல்லூரியில் நடைபெற்ற அரசு விழாவில், முதலமைச்சர் 6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று உயர் கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 உதவித் தொகை வழங்கும் புதுமைப் பெண் விரிவாக்கத் திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுமைப் பெண் விரிவாக்கத் திட்டம் குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது:, முதலமைச்சர் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளியில் படித்து, மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் பட்டப் படிப்பு, பட்டயப்படிப்பு, தொழிற்படிப்பு ஆகியவற்றில் இடைநிற்றல் இன்றி முடிக்கும் வரை மாதம் ரூ.1,000 வழங்கும் புதுமைப்பெண் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்.

இத்திட்டம் துவங்கப் பட்டது முதல் தற்போது வரை கலை, அறிவியல், பொறியியல், தொழிற்படிப்பு, மருத்துவ கல்லூரிகளில் பயின்ற மாணவிகள் உட்பட சுமார; 4.25 இலட்சம் மாணவிகள் பயனடைந் துள்ளனர்.

முதலமைச்சர் 30.12.2024 அன்று தூத்துக்குடி, காமராஜ் கல்லூரியில் நடைபெற்ற அரசு விழாவில், 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 உதவித் தொகை வழங்கும் புதுமைப் பெண் விரிவாக்கத் திட்டத்தை தொடங்கி வைக்கும் விதமாக 10 மாணவிகளுக்கு பற்றட்டைகளை வழங்கினார். அதனைத் தொடர்ந்து, புதுக்கோட்டை கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சட்டத்துறை அமைச்சர், மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் கலந்து கொண்டு, மாணவிகளுக்கு பற்றட்டைகளை 30.12.2024 அன்று வழங்கினார்.

அந்தவகையில், புதுக்கோட்டை மாவட்டத்தில், 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்ற 1,371 தகுதியான மாணவிகளில் 500 மாணவிகளுக்கு புதுமைப் பெண் விரிவாக்கத் திட்டத்தின்கீழ், மாதந் தோறும் தலா ரூ.1000 உதவித் தொகை பெறுவதற்கான பற்றட்டைகள் வழங்கப் பட்டது.

அதன்படி, புதுமைப் பெண் திட்டத்தின் விரிவாக்கமாக, அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ்வழியில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்று உயர் கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 உதவித் தொகை வழங்கப் படும். இத்திட்டத்தில் கலை மற்றும் அறிவியல், தொழிற் சார் படிப்புகள், இணை மருத்துவம் சார்ந்த படிப்புகள், பட்டயப் படிப்பு, தொழிற்கல்வி மற்றும் ஒருங்கிணைந்த பட்ட மேற்படிப்பு (முதல் 3 ஆண்டுகளுக்கு மட்டும்) போன்ற உயர்கல்வி படிப்புகள் படிக்கும் மாணவியர்கள் பயன்பெறுவர்.

எனவே, தமிழக அரசு மாணாக்கர்களின் கல்வி நலனிற்காக செயல்படுத்தப் பட்டுள்ள இத்திட்டத்தினை பெற்றுள்ள மாணாக்கர்கள் முதலமைச்சருக்கு உள்ளம் நெகிழ்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொண்டனர் என வும் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.அருணா தெரிவித்துள்ளார்.

பின்னர் புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியைச் சேர்ந்த மாணவி கோகிலா தெரிவித்ததாவது;, என் பெயர் கோகிலா, நான் இரண்டாம் ஆண்டு இளங்கலை உடற்கல்வி பயின்று வருகிறேன். முதலமைச்சர் அரசுப் பள்ளி மாணவிகளின் உயர்கல்வியினை ஊக்குவிக்கும் நோக்கில் 'புதுமைப் பெண்" திட்டத்தினை கொண்டு வந்ததுபோல, அரசு மற்றும் அரசு உதவிப் பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவிகளும் பயனடையும் நோக்கில் தற்போது மாதந் தோறும் ரூ.1000 வழங்கிடும் 'புதுமைப் பெண் விரிவாக்கத்" திட்டத்தினை துவக்கி வைத்துள்ளார்.

இத்திட்டம் துவக்கி வைத்த நாளிலே என்னுடைய வங்கிக் கணக்கில் ரூ.1000 வரவு வைக்கப்பட்டுள்ளது. இது என்னுடைய சிறு கல்வி செலவுகளுக்கு பயனுள்ளதாக அமையும். என்னை போன்ற ஏழை, எளிய மாணவிகளின் சிரமங்களை போக்கி வறுமையினால் கல்வியினை பாதியிலேயே நிறுத்திவிடும் மாணவ, மாணவிகள் கல்லூரிக்கு வருவதற்கு ஊக்குவிக்கும் வகையில் இத்திட்டம் அமைந்துள்ளது. இதே போன்று மாணவர்களுக்கு 'தமிழ்ப் புதல்வன்" திட்டமும் செயல்படுத்தி வருகிறார். இத்தகைய திட்டங்கள் மூலம் தமிழக மாணவ, மாணவியர்களின் உயர்கல்வி ஏற்றம் தந்து, இளைய சக்தியின் வளர்ச்சிக்கு அடிதளமாக அமைவதுடன் வளமான தமிழகத்துக்கு மூலதனமாக அமையும்.



இத்தகைய நன்மைகளை கொண்ட 'புதுமைப் பெண் விரிவாக்கத்" திட்டத்தினை செயல்படுத்திய முதலமைச்சருக்கு எனது சார்பிலும், என்னை போன்ற மாணவர்களின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று மாணவி கோகிலா தெரிவித்தார்.

**தொகுப்பு**
**திருமதி.க.பிரேமலதா, எம்.காம்., பி.ஜி.டி.சி.ஏ.,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**புதுக்கோட்டை மாவட்டம்.**

# இரணியல் ஸ்ரீ அனுக்கிரக சாய்பாபா அன்பாலயம் 9வது வருஷாபிஷேக விழா: சுவாமி பத்மேந்திரா பங்கேற்பு



நாகர்கோயில் :

குமரி மாவட்டம் இரணியல் சாய்நகர் சீரடி ஸ்ரீ அனுக்கிரக சாய்பாபா அன்பாலயம் துவாரகாமாயி 9வது வருஷாபிஷேக விழா 31.12.2024 செவ்வாய்க் கிழமை மற்றும் 01.01.2025 புதன்கிழமை நடைபெற்றது.

விழா நிகழ்ச்சியில் காலையில் காக்கட ஆரத்தி, மங்கல இசை, மகா கணபதி ஹோமம், கலச பூஜை, கோமாதா பூஜை,அர்ச்சனை மற்றும்சிறப்பு நிகழ்ச்சியாக பிரபஞ்ச சக்திக்கு நன்றி தெரிவிக்கின்ற விதமாக உலக நன்மைக்காக மகா சுதர்சன யாகம் நடத்தப்பட்டது. யாகசாலை மற்றும் வழிபாட்டுகளை ஆலய தந்திரி சூரிய ஆனந்த் ஷர்மா நடத்தினார்கள். அறக்கட்டளை நிர்வாக இயக்குனர் மருத்துவர் கோலப்பன் தலைமையில் மருத்துவர் ரெஞ்சு, தலைவர் கஸ்தூரி, பொருளாளர் சிதம்பர ராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

31.12.2024 திங்கள்கிழமை நடைபெற்ற விழாவில் மதுரை செட்டியார் பிள்ளையார் நத்தம் குருநாதர் ஸ்ரீலஸ்ரீ ஞான யோகி ரவி தாத்தா மற்றும் குருமாதா சுபா அம்மா ஆகியோர் அருள் ஆசி வழங்கினார்கள். மாலையில் முனைவர் சம்பத் சுப்பிரமணி சொற்பொழிவு ஆற்றினார். தொடர்ந்து செல்வி. பி. எஸ். பிரயோஷிகா பரதநாட்டியம் நடைபெற்றது. 01.01.2025, செவ்வாய்க்கிழமை காலையில் சிறப்பு பூஜை நடை பெற்றது.

வள்ளலார் பேரவை மாநில தலைவர் சுவாமி பத்மேந்திரா அருளாசி வழங்கி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக தூத்துக்குடி மாவட்டம் நுகர்வோர் குறைதீர் ஆணையம் தலைவர் நீதிபதி நீலப் பிரசாத், கன்னியாகுமரி மாவட்டம் மதுவிலக்கு அமலாக்கு பிரிவு காவல்துணை கண்காணிப்பாளர் சந்திரசேகரன், நாகர்கோவில் 12வது மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் எம்.சுனில் குமார் மற்றும் இரணியல் காவல் ஆய்வாளர் செந்தில் வேல் குமார் ஆகியோர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்கள். வடசேரி ஸ்ரீ ராஜராஜேஸ்வரி நாட்டியாலயா மற்றும் ஸ்ரீஅட்சயா நிருத்யாலயா மாணவிகள் அட்சயா, பவித்ரா பரதநாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

விழா ஏற்பாடுகளை இரணியல் சீரடி சாய்பாபா குமரி அறக்கட்டளை நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தார்கள்.

# சுசீந்திரம் ஸ்ரீ தாணுமாலயன் கோயில் மார்கழி பெருந்திருவிழாவுக்கான மஞ்சள் வழங்கும் நிகழ்ச்சி



கன்னியாகுமரி:

சுசீந்திரம் அருள்மிகு ஸ்ரீ தாணுமாலயன் திருக்கோயில் மார்கழி பெருந்திருவிழாவுக்கான மஞ்சள் வழங்கும் நிகழ்ச்சி, கோயில் வளாகத்தில் உள்ள சித்திரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கோயில் மார்கழி பெருந்திருவிழா ( ஜன 4) அன்று காலை 7.45 மணிக்கு கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

பாரம்பரிய முறைப் படி திருக்கோயில் வழிவகை ஊர் தலை வர்களுக்கு மஞ்சள் வைத்து அழைப்பிதழ் வழங்கும் நிகழ்ச்சி, குமரி மாவட்ட திருக் கோயில்கள் நிர்வாக அறங்காவலர் குழுத் தலைவர் பிரபா ஜி. ராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

வட்டப் பள்ளி மடம் ஸ்தானிகர் டாக் டர் சிவபிரசாத் பிடாகை காரர்களுக்கு அழைப்பிதழ் வழங்கினர். இந்நிகழ்ச்சியில், அறங்காவலர் குழு உறுப்பினர்கள் துளசிதரன் நாயர், ராஜேஷ், சுந்தரி, நாகர்கோயில் தொகுதி சூப்பிரண்டு ஆனந்த், கோயில் மேலாளர் ஆறுமுக தரன், கணக்கர் கண்ணன், சுசீந்திரம் பேரூராட்சி தலைவர் அனுஷியா, தி.மு.க பேரூர் செயலாளர் சுதை சுந்தர், 18 பிடாகை மற்றும் ஊர் தலைவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் சூளாங்குறிச்சி ஊராட்சியில் அமைந்துள்ள மணிமுத்தார் நதி துணை வாய்க்காலில் இருந்து பம்பு செட் மூலம் தண்ணீரை அப்பகுதி பெரிய ஏரிக்கு நிரப்பும் பணியை ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம்.க. கார்த்திகேயன், கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியாளர் பிரசாந்த் ஒன்றாக சேர்ந்து துவக்கி வைத்தார்கள் . இந்த நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய பெருந்தலைவர், துணைத் தலைவர், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் அரசு துறை சேர்ந்த அதிகாரிகள் அலுவலர்கள் கிராமப் பொதுமக்கள் என அனைவரும் உடன் இருந்தனர்.

## சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை வட்டம்

# கல்லங்குடி கிராமத்தில், 8ம் தேதி மக்கள் தொடர்பு முகாம்

சிவகங்கை :

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், தேவகோட்டை உள்வட்டம், கல்லங்குடி குரூப், கல்லங்குடி கிராமத்தில், வருகின்ற 08.01.2025 அன்று காலை 10.00 மணியளவில் மக்கள் தொடர்பு முகாம் நடைபெறவுள்ளது.

மக்கள் தொடர்பு முகாமில், அரசுத் துறை அலுவலர்களை ஒருங்கிணைத்து அரசின் திட்டங்களை துறை சார்ந்த முதன்மை அலுவலர் களைக் கொண்டு, பொதுமக்களுக்கு திட்டங்கள் குறித்து எடுத்துரைத்து, தகுதிவாய்ந்த பயனாளிகளை பயன்பெறச் செய்வதே இம்மக்கள் தொடர்பு முகாமின் நோக்கமாகும்.

எனவே, மேற்கண்ட கிராமத்தை சேர்ந்த பொதுமக்கள் அனைவரும் நடைபெறவுள்ள மக்கள் தொடர்பு முகாமில் கலந்து கொண்டு, அரசின் திட்டங்களை பெறுவதற்கான வழிமுறைகளை அறிந்துகொண்டு பயன் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

# ஆண்ட பரம்பரை பேச்சு

## அமைச்சர் மூர்த்தி விளக்கம்



மதுரை:

மதுரையில் சில நாட்களுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசிய பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் மூர்த்தி, "ஆண்ட பரம்பரை என்பதை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்" என்று பேசிய வீடியோ சமூக வலைதளங்களில் வெளியாகி சர்ச்சைக்குள்ளானது.

இந்த நிலையில் மதுரை அவனியாபுரத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அமைச்சர் மூர்த்தி சர்ச்சைக்குள்ளான பேச்சு குறித்து விளக்கம் அளித்தார்.

அப்போது அவர் கூறும்போது, "சிலர் தவறான தகவலை எடிட் செய்து பரப்புகிறார்கள். நான் ஒரு அமைச்சர்; அனைத்து சமுதாய மக்களுக்கும் பொதுவான நபர். அன்று நடந்த நிகழ்ச்சியில், நீங்கள் தற்போது பின்தங்கியிருக்கிறீர்கள். இப்போது படித்து முன்னேறி வருகிறீர்கள். அரசுப் பதவிக்கு வரும் நீங்கள் அனைத்து சமுதாய மக்களையும் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும் என்றுதான் கூறினேன். அந்த வீடியோவை முழுமையாக பாருங்கள்.

யாரோ வேண்டுமென்றே குறிப்பிட்ட பகுதியை மட்டும் எடிட் செய்து பரப்பியுள்ளனர். நான் ஆண்ட பரம்பரை என்று கூறியது, ராஜராஜ சோழன் காலத்தில் இருந்து ஆண்ட பரம்பரை என்று தான் குறிப்பிட்டேன். இது நேற்று நடந்தது இல்லை. சில மாதங்களுக்கு முன்பு நடந்ததை யாரோ வேண்டுமென்றே இப்போது பரப்புகிறார்கள்" என்று கூறினார்.

# ராஜபாளையத்தில் சாலையில் சுற்றித்திரியும் மாடு, நாய்கள்: பதறும் பொதுமக்கள்!

ராஜபாளையம் :

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் நகரில் சாலைகளில் சுற்றித்திரியும் கால்நடைகளால் விபத்துகள் நடைபெறுவது தவிர்க்க இயலாத நிலை தொடர்கிறது.

குறிப்பாக, சங்கரன்கோவில் முக்கு, காந்தி சிலை ரவுண்டானா, காட்டன் மார்க்கெட் உள்ளிட்ட பகுதிகளில் சாலைகளில் அதிக அளவிலான கால்நடைகள் சுற்றிவருகின்றன. டி.பி. மில்ஸ் சாலை, ரயில்வே பீடர் ரோடு, சங்கரன்கோவில் முக்கு பகுதிகளில் நாய்கள் கூட்டம் கூட்டமாக சுற்றித்திரிகிறது. அதனை கடந்து செல்லும் பாதசாரிகள் பதற்றத்துடன் செல்லும் அவலம் உள்ளது.

நகராட்சி நிர்வாகம் சார்பில் சாலையில் சுற்றும் மாடுகளின் உரிமையாளர்களுக்கு அபராதம் விதித்து நடவடிக்கை மேற்கொண்டாலும், சாலைகளில் மாடுகள் நடமாட்டம் குறைந்த பாடில்லை. கால்நடைகள் சாலைகளில் சுற்றுவதைத் தடுக்கவும், நாய்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தவும் நகராட்சி நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ராஜபாளையத்தில் பட்டப்பகலில் பெண்ணிடம் சங்கிலி அறுப்பு!

## போராடி சங்கிலியை மீட்ட பெண்ணுக்கு பாராட்டு!

ராஜபாளையம் :

விருதுநகர் மாவட்டம் ராம்நகர் பகுதியைச் சேர்ந்த சுரேஷ் என்பவரது மனைவி முத்துலட்சுமி வயது 48. இவர் ராம் நகர் பகுதியில் உள்ள ஒரு கடைக்கு செல்வதற்காக நடந்து சென்று கொண்டிருந்தார். அது சமயம் இருசக்கர வாகனத்தில் தனியாக ஒருவர் ஹெல்மெட் அணிந்து கொண்டு வேகமாக வந்து இவரிடம் சங்கிலியை பறிக்க முயற்சித்தார்.

கழுத்தில் அணிந்திருந்த சங்கிலியைப் பறிக்க முயற்சித்தவரிடம் கடுமையாக போராடி நகையை இறுக பற்றி கொண்டு நகையை விடாமல் கூச்சலிட்டார். உடனடியாக அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் விரைந்து வருவதை அறிந்து மர்ம நபர் சங்கிலியை விட்டுவிட்டு மோட்டார் சைக்கிள் தப்பி ஓடிவிட்டார். இது குறித்து ராஜபாளையம் குற்றப்பிரிவு போலீசார் வழக்கு பதிவு செய்து அந்த பெண்ணிடம் தீவிர விசாரணை நடத்தினார்கள்.

பின்னர் அங்கிருந்த சிசிடிவி கேமரா போன்றவர்களை ஆராய்ந்து குற்றவாளியை தீவிரமாக தேடி வருகிறார்கள். பட்டப்பகலில் நடைபெற்ற சங்கிலி அருப்பில் கடுமையாக போராடி சங்கிலியை மீட்ட பெண்ணுக்கு பாராட்டு குவிகிறது.

வணக்கம் தமிழகம்
Email: thillaikural@gmail.com
RNI No. APTAM/2012/45644



# சீர்காழி மேலவல்லத்தில் கடவுளுக்கு கோவில் கண்ட காடவராயர் குடும்பத்தினருக்கு காலாஞ்சி வழங்குதல்

சீர்காழி :

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி கோட்டம் கொள்ளிடம் ஒன்றியம் மேல வல்லத்தில் ஸ்ரீ பிரத்யங்கிரா தேவி கோவில் உள்ளது இதில் வணங்கி வழிபடுகின்றவர்களுக்கு வெற்றியினை தந்த வண்ணம் உள்ளாள் இது ராஜ ராஜ சோழன் தான் போருக்கு செல்லுகின்ற போது வெற்றி பெறுவதற்காக வராகி அம்மனை வழிபட்டு வந்தார்

சென்ற இடமெல்லாம் வெற்றியும் பெற்று வந்தார் அது முதல் வெற்றினை அடைவதை லட்சியமாக கொண்டிருக்கின்ற பக்தர்கள் தேவியை வணங்கி வழிபடுகின்றார்கள் இந்த பிரித்திங்கரா தேவி முகம் சிங்கமாகவும் குடையாக ஐந்து தலை நாகமும் நான்கு கரங்களோடும் கருங்கல் திருமேனியாக காடவராயர் குடும்பத்தினர் கோவிலை அமைத்து பக்தர்கள் வழிபாடு செய்திட ஏற்பாடு செய்தனர்.

இதில் ஏக குண்டம் அமைத்து ஊராட்சி மன்ற மேனாள் தலைவர் பாரிவள்ளல் முன்னிலையில் யாகம் செய்தும் மிளகாயை தாம்பாளம் தாம்பாளமாக சிவாச்சாரியாரால் கொட்டப்பட்டது மிளகாய் யாகத்தில் எரியும் போது ஒரு சிறு நெடி கூட வாராது இருந்தது. அனைவரையும் ஆச்சிரியத்தில் ஆழ்த்தியது.





தொடர்ந்து நாத கானம் பொழிந்திட அபிஷேக ஆராதனை நடைபெற்று தீப ஆராதனை நிகழ்ந்தது தொடர்ந்து பக்தர்களுக்கு விபூதி பிரசாதம் சிவாச்சாரியார்கள். பிரகதீஸ்வரன் ராமமூர்த்தி ஆகியோரால் வழங்கப்பட்டது நிறைந்த பின்னர் அனைத்து அன்பர்களுக்கும் அன்னதானம் கொடுக்கப்பட்டது.

விழா ஏற்பாடுகளை அம்மா மக்கள் முன்னேற்றக் கழக மாவட்ட செயலாளர் பாரிவள்ளல் மேலும் ரவி .சங்கர் .விஜயன் டாக்டர்கள் பிரவீன் குமார் அருண் குமார் ஆகியோர் செய்திருந்தனர் இந்த விழாவில் ஆயங்குடி பள்ளம் பாஸ்கரன் குமிளங்காடு பரமசிவம் சிவப்பு செந்தில் எருக்கூர் ஆலய பூசாரி யார் பழனிவேல் டாக்டர் சீர்காழி சரவணன் மற்றும் பக்தர்கள் கலந்துகொண்டு வழிபட்டனர்.

மணி சங்கர் சுப்பிரமணியன்




# கரும்பு டன்னுக்கு 6000 வழங்க வேண்டும்

## விவசாய சங்க மாநில தலைவர் வேலுசாமி பேட்டி

நாமக்கல்:

நாமக்கல் மாவட்டம் மோகனூரில் செயல்பட்டு வரும் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை முன்பு உழவர் பெருந் தலை வர் நாராயணசாமி நாடார், தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் ‘கரும்பு டன் ஒன்றுக்கு, 6,000 வழங்கக் கோரி, நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

தமிழகவிவசாயிகள் சங்க மாநில தலைவர் வேலுசாமி தலைமை வகித்தார். ஆர்ப் பாட்டத்தில், சட்டசபை தேர்தல் அறிக்கையில்,கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன் றுக்கு ரூ.4,000 விலை நிர்ணயம் செய்யப்படும்என வாக்குறுதி அளித்தனர். ஆனால், அந்த வாக்குறுதியை நிறைவேற்றா ததை கண்டித்து கோஷம் எழுப்பினர். பின்னர் மாநில தலைவர் வேலுசாமி நிருபர்களிடம் பேட்டியில் கூறியதா வது:

தற்போது, பல்வேறு உற் பத்தி செலவினங்கள் மற்றும் விலை உயர்வு காரணமாக, விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலையாக, டன் ஒன்றுக்கு, ரூ.6,000 விலையை உயர்த்தி வழங்க வேண்டும். கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, சர்க்கரை ஆலை நிர்வாகம், 3,151 மட்டுமே வழங்கி வருகிறது. அதனால், தமிழகத்தில் விவசாயிகள் கரும்பு சாகுபடி பரப்பை குறைத்துவிட்டனர்.

தற்போதுள்ள சூழ்நிலையை கருத்தில் கொள்ளும்போது, கரும்புசாகுபடி செய்யும் தமிழகவிவசாயிகளுக்கு, குறைந்த பட்ச ஆதார விலையாக, 2024 25ம் ஆண்டு அரவை பருவத்திற்கு, தமிழக அரசு, கரும்புடன் ஒன்றுக்கு, 6,000 விலைஉயர்த்திவழங்கவேண்டும்.

தவறும் பட்சத்தில், வரும் நிதிநிலை அறிக்கை சட்டசபையில் தாக்கல் செய்யும் போது, கோட்டடையை முற்றுகையிடும் போராட்டத்தில், கரும்பு விவசாயிகள் சங்கத்தினர் ஈடுபடுவோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இதில், தமிழக விவசாயிகள் சங்க மாநில பொருளாளர் ராஜேஸ், மாவட்ட தலைவர் பொன்னுசாமி, நிர்வாகிகள், உறுப்பினர்கள், விவசாயிகள் உள்ளிட்ட ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# கோவில்பட்டியில் வானமே எல்லை என்ற தலைப்பில் இளைஞர்களுக்கான இலவச தன்முனைப்பு பயிற்சி முகாம்

கோவில்பட்டி:

வருங்கால இளம் தலைமுறையினர், இளைஞர்கள் இளைஞிகள், கல்லூரி மாணவ மாணவிகள் தன்னம்பிக்கையுடன் செயல்படுவதற்கும், சுயதொழில் தொடங்கி முன்னேற்றம் அடைவதற்கும் ஏற்ற வகையில் அதற்கான வழிகாட்டுதல்களை வழங்க வேண்டும் என்பதற்காக தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் உள்ள சௌபாக்கியா திருமண மண்டபத்தில் கோவில்பட்டி தொகுதி இளைஞர்கள் ஒருங்கிணைப்பு குழு மற்றும் ஜெயா கேட்டரிங் கல்லூரி சார்பில் வானமே எல்லை என்ற தலைப்பில் இளைஞர்களுக்கான இலவச தன்முனைப்பு பயிற்சி முகாம் நடைபெற்றது.




நீங்களும் பெரிய தொழிலதிபராகலாம் என்ற தலைப்பில் இதயம் நல்லெண்ணெய் நிறுவனத்தின் சேர்மன் முத்து மாணவர்களுக்கு தொழில் தொடங்குவது பற்றியும், அதில் வரக்கூடிய சவால்கள் அதனை எதிர்கொள்வது எப்படி வெற்றி பெறுவது என்பது குறித்து எடுத்துரைத்தார்..

அதைப் போன்று தன்னம்பிக்கையுடன் செயல்பாடுகள் எந்த வகையில் இருக்க வேண்டும் என்பதனை ஊக்குவிக்கும் வகையில் பேச்சாளர் கவிதா ஜவகர் பெரிதினும் பெரிது கேள் என்ற தலைப்பில் உரையாற்றினார். கோவில்பட்டி கம்பன் கழகத்தின் செயலாளர் சரவணன் செல்வன் வாழ்த்துரை வழங்கினார். ரோட்டரி சங்க மாவட்ட விருதுகள் பிரிவு தலைவர் விநாயக ரமேஷ்,கோவில்பட்டி ரோட்டரி சங்கத்தின் தலைவர் தாமோதரக் கண்ணன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டனர்.

இதில் கோவில்பட்டி மற்றும் சுற்றுவட்டார பகுதியில் உள்ள கல்லூரி மாணவ மாணவிகள் மற்றும் இளைஞர்கள் திரளாக கலந்துகொண்டு பயன்பெற்றனர். இதற்கான ஏற்பாடுகளை ஜெயா கேட்டரிங் கல்லூரி, ஹோட்டல் சரவண பவன் உரிமையாளரும், முன்னாள் மாநில எம் ஜி ஆர் இளைஞர் அணி துணைச் செயலாளருமான சீனி ராஜ், முன்னாள் வழக்கறிஞர் பிரிவு மாவட்ட செயலாளரும் கோவில்பட்டி தொகுதி இளைஞர்கள் ஒருங்கிணைப்பு குழு தலைவருமான வழக்கறிஞர் சிவபெருமாள், கோவில்பட்டி தொகுதி இளை ஞர்கள் ஒருங்கிணைப்பு குழு செயலாளர் கோமதிநாயகம்,, துணைச் செயலாளர் காசி பாண்டியன் ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை செய்து இருந்தனர்.

# ராஜபாளையம் பெண்கள் கல்லூரியில் இளைஞர் செஞ்சுலுவைச் சங்க கருத்தரங்கு!

ராஜபாளையம் :

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் எ.கா.த .தர்மராஜா பெண்கள் கல்லூரியில் இளைஞர் செஞ்சுலுவைச் சங்கம் நிகழ்ச்சி நடைபெற்றது மூன்று பகுதிகளாக நடைபெற்ற நிகழ்ச்சியில் முதற் பகுதியின் சிறப்பு விருந்தினராக இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி செயலாளர் பாலமுருகன் கலந்துகொண்டு செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிகள் மற்றும் நன்மைகள் குறித்து பேசினார்.




இரண்டாவது பகுதியில் ராஜபாளையம் தீயணைப்பு நிலைய அலுவலர் ஸ்ரீனிவாசன் கலந்துகொண்டு நெருப்பின் தடுப்பு முறைகள் மற்றும் பாதுகாப்பு குறித்து கூறினார். மூன்றாவது பகுதியில் வனவிலங்கு சங்கம் சார்பில் ஷியாம் கலந்துகொண்டு பாம்புகளால் ஏற்படும் ஆபத்துகள் மற்றும் தடுப்பு முறைகள் குறித்து பேசினார்.

மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் மரியபாக்கியம் மற்றும் உதவி ஆய்வாளர் கிறிஸ்டி சைபர் கிரைம் மற்றும் சைபர் செக்யூரிட்டி சார்பாக கருத்துக்கள் பகிரப்பட்டது. ஒருங்கிணைப்பாளர் விஜயலட்சுமி வரவேற்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் ஜமுனா அறிமுக உரையாற்றினார். கல்வி ஆலோசகர் சங்கரநாராயணன் தலைமை உரையாற்றினார். மாணவி ஜீவிதா புஷ்பம் நன்றி கூறினார்.

# புத்தாண்டை முன்னிட்டு ஸ்ரீ வருஷ விநாயகர் கோவிலில் சிறப்பு வழிபாடு!

ராஜபாளையம் :

உலகம் முழுவதும் ஆங்கில புத்தாண்டை சிறப்பாக வரவேற்று கொண்டாடி வருகின்றனர். பல்வேறு கோயில்களில் சிறப்பு வழிபாடும், தேவாலயங்களில் சிறப்பு பிரார்த்தனைகளும், மசூதிகளில் சிறப்பு தொழுகையும் நடைபெற்றது.



விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் செண்பகத் தோப்பு சாலையில் எதிர் மேட்டில் உள்ள ஸ்ரீ வருஷ விநாயகர் கோவிலில் ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு சிறப்பாக வழிபாடு நடத்தப்பட்டது.

அப்பகுதியைச் சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் பங்கேற்று சிறப்பு அபிஷேகம் நடத்தி, சிறப்பு அலங்காரம் செய்வித்து, சிறப்பு வழிபாடு நடத்தினார்கள்.

ஏராளமான பொதுமக்கள், பக்தர்கள் கலந்து கொண்டு பக்தி பாடல்கள் பாடி அருள்மிகு வருஷ விநாயகரை வழிபாடு செய்தனர்.





# முட்லூரில் அனுமன் ஜெயந்தி விழா

சீர்காழி :

கடலூர் மாவட்டம் புவனகிரி வட்டம் முட்லூரில் நான்கு முனை சந்திப்பில் ஸ்ரீ ராம ஹனுமான் தரும பரிபாலன அறக்கட்டளை நிறுவனர் சீனு என்ற ராமதாசன் மற்றும் கிராமவாசிகளால் தசாவதாரம் கண்டு வருகின்ற திருமாலுக்கு தொண்டு செய்கின்ற காற்றின் மைந்தன் அனுமபெருமாளுக்கு 10 அடி உயரத்தில் கருங்கல் திருமேனிஅமையப்பெற்று ஆண்டு தோறும் நடைபெறுகின்ற அனுமஜெயந்தி விழாவில் அபிஷேக ஆராதனை செய்வித்து துளசி மாலை வெற்றிலை மாலை வடை மாலை பழ வகைகளால் ஆன மாலைகள் ஆகியவற்றை அனுவித்து தீபா அலங்காரங்கள் காட்டப்பட்டு தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

அன்னதானத்தை வெகு சிறப்பாக அனைத்து அன்பர்களும் வரிசையில் வந்து பெற்றுக் கொண்டனர் விழாவில் எம்எல்ஏ மேலும் சாமிகள் ஈஸ்வரன் கிராமவாசிகள் பக்தர்கள் கலந்து கொண்டனர்.

விழா ஏற்பாடுகளை ஆலய ஸ்தாபகர் நிர்வாகி சீனு என்ற ராமதாசன் இன்ஜினியர்கள் ராம ஆகாஷ் ராம பிரகாஷ் ஆகியோர் செய்திருந்தனர். 127 அடி சிலை எழுப்பப்படுகின்ற தால் 40 அடி அஸ்திவாரமும் விட்டு எழும்பி வருகின்றது.



# ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு சின்னாளபட்டி சிவசுப்ரமணியர் கோவிலில் மூலவருக்கு 16 வகையான அபிஷேகங்களுடன் இராஜ அலங்காரம்

சின்னாளபட்டி :

ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு சின்னாளபட்டி சிவசுப்ரமணியர் கோவிலில் மூலவருக்கு 16 வகையான அபிஷேகங்களுடன் இராஜ அலங்காரம் செய்திருந்தனர். உற்சவ முருகப் பெருமானுக்கு மலர்களை கொண்டு அலங்காரம் செய்த முன் மண்டகப் படியில் பக்தர்கள் தரிசனத்திற்காக வைத்திருந்தனர்.

திண்டுக்கல் மாவட்டம் கடை வீதியில் அமைந்துள்ளது அருள்மிகு ஸ்ரீசிவ சுப்ரமணிய சுவாமி திருக்கோவில். ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மற்றும் சஷ்டியை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் நடைபெறுவது வழக்கம். இவ்வருடம் ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு மூலவரான சிவசுப்பிரமணியருக்கு பால், தேன், தயிர், பஞ்சாமிர்தம், திரவியப்பொடி, மாபொடி, மஞ்சள்பொடி, பன்னீர், இளநீர், விபூதி, உட்பட சுவாமிக்கு 16 வகை அபிஷேகங்களுடன் சிறப்பு அலங்காரம் செய்திருந்தனர்.

முன் மண்டகப்படியில் உற்சவ பெருமாளானா முருகப் பெருமானுக்கு வள்ளி தேவசேனையுடன் மலர்களை கொண்டு சிறப்பு அலங்காரம் செய்து பக்தர்கள் தரிசனத்திற்காக வைத்திருந்தனர். அதிகாலை முதல் கோவிலில் கூட்டம் அலைமோதியது. சின்னாளபட்டி, செம்பட்டி, ஆத்தூர், ஒட்டன் சத்திரம், வத்தலக்குண்டு, திண்டுக்கல் உட்பட பல ஊர்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வந்து சுவாமியை தரிசனம் செய்த வண்ணம் இருந்தனர்.

விழாவுக்கான ஏற்பாடுகளை ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோவில் ஸ்தாபகரும் அறங்காவலருமான மறைந்த குமாரசாமி செட்டியார் அவர்களின் மகன் டாக்டர் விசாகன்; மற்றும் கோவில் கண்காணிப்பாளர் குணசேகரன் தலைமையிலான விழா கமிட்டியார்கள் சிறப்பாக செய் திருந்தனர். சுவாமிக்கான அலங்கா ரத்தை கோவில் குருக்கள் மயிலாடுதுறை விஸ்வநாத குருக்கள் சிறப்பாக செய்திருந்தார்.

# விளாத்திகுளத்தில் நம்மாழ்வாரின் 11வது ஆண்டு நினைவு தினம்



விளாத்திகுளம் :

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் பேருந்து நிலையம் முன்பு தமிழக ஏர் உழவன் அனைத்து விவசாயிகள் சங்கம் சார்பாக வைக்கப்பட்டிருந்த இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வாரின் திருவுருவப்படத்திற்கு ஏராளமான இயற்கை விவசாயிகள் மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் முனியசக்தி இராமச்சந்திரன் நம்மாழ்வாரின் திருவுருவப் படத்துக்கு மலர்கள் தூவி செலுத்தினார். பின்னர் யூனியன் சேர்மன் முனியசக்தி ராமச்சந்திரனுக்கு தமிழக ஏர் உழவன் அனைத்து விவசாயிகள் சங்கத்தின் சார்பில் நினைவு பரிசாக ஏர் கலப்பை வழங்கப்பட்டது.

இச்சங்கத்தின் நிறு வனத் தலைவர் ராஜேஷ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் விளாத்திகுளம் ஒன்றிய தலைவர் காளிமுத்துராஜ், இயற்கை கோமாளி கருப்பசாமி, வடக்கு மாவட்ட தலைவர் கணேசன், விருதுநகர் மாவட்ட தலைவர் ராமர், சங்கத்தின் நிர்வாகிகள் முத்துராஜ், மாரிச்செல்வம், ரவிசங்கர், தங்க மாரியப்பன், அழகேந்திரன், ஆகாஷ், தங்கமுத்து பாண்டியன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டு இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வாருக்கு புகழ் வணக்கம் செலுத்தினர்.



திருவண்ணாமலை வட்டம் வேங்கிகால் கிராம நிர்வாக அலுவலராக மாதவன் பொறுப்பேற்றுக் கொண்டார்.

# கோகூர் புனித அந்தோணியார் திருத்தலத்தில் கொடிமர திருவிழா

## தஞ்சை பேராயர் சகாயராஜ் அடிகளார் கொடியேற்றி திருப்பலி நிறைவேற்றினார்

செய்தி:
Dr. வேத .குஞ்சருளன்.
பேராவூரணி.

தஞ்சை மறைமாவட்டம், நாகப்பட்டினம் மறைவட்டம் , கோகூர் கிராமத்தில் அமைந்துள்ளது புனிதர் அந்தோனியார் திருத்தலம். சலவைத் தொழிலாளி யோசேப்பின் நூற்றாண்டின் நிறைவில் கொடிமர முதலாமாண்டு திருவிழா நடைபெற்றது.

திருவிழாவில் கொடிபவனி ,தேர் பவனி,கொடியேற்று விழா நடைபெற்றது கொடியினை தஞ்சை ஆயர் பேரருட்திரு, டி. சகாயராஜ் அடிகளார் புனிதம் செய்து கொடி ஏற்றி வைத்தார். தொடர்ந்து கூட்டுபாடல் திருப்பலியை பேராயர், சகாயராஜ் அடிகளார் தலைமையில் நடைபெற்றது .தொடர்ந்து நூற்றாண்டின் நிறைவின் நினைவாக திவ்ய நற்கருணை நிறுவப்பட்டது.

இது புதிய பங்கின் வளர்ச்சியின் அடித்தளமாகும் .கூட்டு திருப்பலியில் பள்ளங்கோயில் தாளாளர் அமிர்தராஜ் அடிகளார், காரையூர் பங்கு தந்தை அந்தோணியடிகளார், தேவூர் தாளாளர் ஜான்பீட்டர், ஆயரின் செயலாளர் வினிடோ மற்றும் அருள் சகோதரிகள் கலந்து கொண்டனர். டிசம்பர் 29ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கிய திருவிழா ஜனவரி 7ஆம் தேதி கொடி இறக்கத்துடன் நிறைவு பெறுகிறது விழா ஏற்பாடுகளை பங்குத்தந்தை அருட்திரு,டி தேவசகாயம் அடிகளார் செய்திருந்தார் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

இந்த திருத்தலத்தில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் திருப்பலியும்தொடர்ந்துவேண்டுதல்கள் நிறைவேற்றமும், மதியம், இரவு வேண்டுதல் வைத்தவர்கள் ஆலயத்தில் சமைத்து உணவு வழங்குவது வழக்கம். இத்திருத்தலத்தின் ஆண்டு திருவிழா ஜூன் மாதம் முதல் வாரம் கொடி ஏற்றத்துடன் தொடங்குகிறது. கோகூரில் திருத்தலம் கொண்டு அமைந்துள்ள கோடிஅற்புதர் புனிதர் அந்தோணியார் வேண்டுபவர்களுக்கு வேண்டும் வரங்களை தந்து அற்புதம் செய்து வருகிறார்.

இந்த திருத்தலம் திருவாரூர் நெடுஞ்சாலையில் கீழ்வேலூரிலிருந்து வடக்கே சுமார் 4 கிலோ மீட்டர் தூரத்தில் இந்த திருத்தலம் அமைந்துள்ளது.தற்போதைய பங்குதந்தை அருட்திரு , டி.தேவசகாயம் அடிகளார் முழு முயற்ச்சி செய்து திருத்தலத்தை பராமரித்து வருகிறார்.

நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு இரண்டு பெரும் பெருமைகள் உண்டு ஒன்று வேளாங்கண்ணியில் புனித ஆரோக்கிய அன்னையின் திருத்தலம் மற்றொன்று கோகூர் புனித அந்தோணியார் திருத்தலம் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் ஜூன் மாதம் நடைபெறும் புனிதரின் பெரு திருவிழாவிலும் ஆயிரக்கணக்கான மக்கள் கூடுவதையும் ஜெபிப்பதையும் பார்ப்போர் பரவசம் அடைகின்றனர் சாட்சி கூறுகின்றனர். கோகூரில் புனிதர் அந்தோணியார் குடிகொண்டு அற்புதங்கள் ,அதிசயங்கள் ஒவ்வொரு நாளும் செய்து வருகிறார். தன்னை தேடி வரும் மக்களுக்கு தனது அன்பாலும் ,இறக்கத்தாலும் வரங்கள் பல பொழிந்து வரங்கள் பல தந்து,நோய் பேய்களை நீக்கி வாழ வைத்துக் கொண்டிருக்கிறார் .







கிபி 1837 ஆம் ஆண்டு கோகூரில் வாழ்ந்த ஒரு பெரியவர் மீன் பிடிப்பதற்காக தூண்டில் போட்டார். அந்த தூண்டிலில் புனித அந்தோணியார் சொரூபம் வந்து மாட்டியது. அதை தவிர்த்து விட்டு வேறு இடம் சென்று தூண்டில் போட்டுள்ளார். அங்கும் அந்த சுருவம் சுற்றி வந்துள்ளது .அதையும் தவிர்த்து விட்டு வேறு இடம் சென்றுள்ளார் . மீன் எதுவும் கிடைக்கவில்லை.

அந்த இடத்திலும் தூண்டில் புனிதர் அந்தோணியார் சுருவம் மாட்டியுள்ளது. வேறு வழி இன்றி அந்த சுரூபத்தை எடுத்து கரையில் வைத்து விட்டு தூண்டில் போட்டுள்ளார். அவருக்கு போதுமான மீன்கள் ஒரு சில நிமிடங்களிலேயே கிடைத்துள்ளது. மகிழ்ச்சி அடைந்த அவர் சுரூபத்தையும் ,மீன்களையும் எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வந்து உணவு சமைத்து உண்டு விட்டு உறங்கும்போது கனவில் தோன்றி நான்தான் அந்தோணியார் எனக்கு ஆலயம் கட்ட வேண்டும் என்று ஒரு குரல் கேட்டுள்ளது.

காலையில் பெரியவர் ஊர் மக்களிடம் நடந்ததை சொல்ல அனைவரும் சேர்ந்து கீற்று கொட்டகை அமைத்து அதில் புனித அந்தோனியார் சுருக்கத்தை வைத்து வழிபட ஆரம்பித்தனர். அந்த சிறிய சுருவம் ஆலயத்தின் உள்ளே இப்போதும் உள்ளது.

1924 ஆம் ஆண்டு கோகூரில் வாழ்ந்த சலவைத் தொழில் செய்யும் ஜோசப் என்பவர் அந்தோனியாரின் புதுமையால் ஆசீர்வதிக்கப்பட்டார் .அவர் உணவு சமைத்து மக்களுக்கு கொடுக்க ஆசைப் பட்டார். அதன்படி உணவு சமையல் செய்து முடித்த பின்பு ஊர் மக்களுக்கு அழைப்பு கொடுத்தார். ஒருவர் கூட உணவு உட்கொள்ள வரவில்லை .காரணம் கேட்ட போது நீ கீழ் ஜாதியானவன் நீ சமைத்த உணவை நாங்கள் சாப்பிட முடியாது என மறுத்துள்ளனர். வேதனை நிறைந்த இதயத்தோடு புனித அந்தோனியாரிடம் முறையிட்டு விட்டு குழிதோண்டி அந்த உணவை புதைத்துள்ளார்.

அடுத்த ஆண்டு 1925 ஆம் ஆண்டு வேண்டுதல் நிறைவேற்ற வந்த ஒரு குடும்பத்தினர் உணவு சமைக்க எதேச்சையாக அதே இடத்தில் குழியை தோண்ட ,அப்போது சமைத்த உணவுபோல ஆவி பறக்க கமகம என வாசனையோடு உணவு வெளியே வந்ததை கண்டு ஊர் மக்கள் அனைவரும் ஒன்று கூடி மன்னிப்பு கேட்டுவிட்டு அதை உணவை உண்டனர். தற்போது அதே இடத்தில் புனித அந்தோணியார் சொரூபம் வைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் துபாயில் பேராசிரியராக பணிபுரிந்து வரும் முனைவர், எஸ்.பென்சன்எட்வின் ராஜ் என்பவர் கோகூர் புனித அந்தோணியார் திருத்தலத்தில் வேண்டுதல் வைத்து நிறைவேற அதன் வேண்டுதலை நிறைவேற்றுவதற்காக சமையல் செய்து அனைவருக்கும் உணவளித்தார். மேலும் இந்த ஆலயத்திற்கு கொடிமரம் அமைக்க முயற்சி செய்வதாகவும் கூறி இருந்தார். அதன் பலனாக அவர் விரும்பியபடி தஞ்சையில் நிலங்கள் வாங்கியுள்ளார். அவருக்கு ஜெஸ்டீனாபிரியா என்ற துணை கிடைத்து திருமணம் நடந்துள்ளது.

மகிழச்சியடைந்த அவர் அவரின் குடும்பத்தின் சார்பில் ரூபாய் 15 லட்சம் செலவு செய்து கொடி மரத்தை அமைத்தார். அதன் திறப்பு விழா டிசம்பர் 29ம் தேதி திருவிழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலேயே 81 அடியில் கொடிமரம் அமைந்துள்ள திருத்தலம் இது என்பது குறிப்பிடதக்கது. தற்போது அவருக்கு ஆண் குழந்தை பிறந்து அந்த குழந்தைக்கு அந்தோணியார் என பெயர் சூட்டியுள்ளனர் என்பது குறிப்பிடதக்கது.

# அரியலூர் மாவட்டத்தில் ஜல்லிக்கட்டு ஒருங்கிணைப்பாளர்களுக்கான விழிப்புணர்வு கூட்டம்








அரியலூர் :

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், ஜல்லிக்கட்டு ஒருங்கிணைப்பாளர்களுக்கான விழிப்புணர்வு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் பொ.இரத்தினசாமி தலைமையில் நடைபெற்றது.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஜல்லிக்கட்டு ஜனவரி மாதம் தொடங்கி மே மாதம் வரை நடைபெறுகிறது. தமிழ்நாடு விலங்குகள் வதை தடுப்பு (ஜல்லிக்கட்டு நடத்துதல்) விதிகள், 2017ன் பிரிவு 3 ( 2 )இன் கீழ் பரிந்துரைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட வேண்டும் என்பது கண்டிப்பாக அமல்படுத்தப்பட வேண்டிய ஒன்று. அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட இடங்களைத் தவிர மற்ற இடங்களில் ஜல்லிக்கட்டு நடத்த அனுமதிக்க இயலாது.

ஜல்லிக்கட்டு நிகழ்வுகளுக்காக புதிதாக உருவாக்கப்பட்ட www.jallikattu.tn.gov.in என்ற இணையதளத்தில் ஆன்லைன் முறையில் விண்ணப்பங்கள் செயலாக்கப்பட வேண்டும் என் பதன் காரணமாக இன்றைய தினம் ஜல்லிக்கட்டு ஒருங்கி ணைப்பாளர்களுக்கு அறிவுரை வழங்குவது குறித்து, அரியலூர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் வரு வாய்த் துறை, கால்நடை பராமரிப்புத்துறை, காவல்துறை, சுகாதாரத்துறை, தீயணைப்புத் துறை மற்றும் பொதுப் பணித் துறை அதிகாரிகள் அடங்கிய குழு மற்றும் ஜல்லிக்கட்டு ஒருங்கி ணைப் பாளர் களுடன் கூட்டம் நடைபெற்றது.

இதில் கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் மரு. பாரிவேந்தன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) பரிமளம், வருவாய் கோட்டாட்சியர்கள் மணிகண் டன் (அரியலூர்), ஷீஜா (உடை யார்பாளையம்), அரசு அலு வலர்கள் மற்றும் ஜல்லிக்கட்டு ஒருங்கிணைப் பாளர்கள் உள் ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



## சிவகங்கையில் அதிமுக மாவட்டச் செயலாளர் செந்தில்நாதனுக்கு எதிராக போஸ்டர் ஒட்டியவர் மீது போலீஸ் எஸ்.பி.யிடம் புகார்

சிவகங்கை :

சிவகங்கை மாவட்டத்தில் அதிமுக மாவட்டச் செயலாளராக இருப்பவர் பி .ஆர். செந்தில்நாதன் . இவருக்கு எதிராக நேற்று வியாழக்கிழமை சிவகங்கை நகர் முழுவதும் நோட்டீஸ் ஒட்டப்பட்டு இருந்தது . அந்தப் வால்போஸ்டர் நோட்டீசை கண்டித்து சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் செந்தில்நாதன் தலைமையில் அதிமுக நிர்வாகிகள் திரளாகச் சென்று சிவகங்கை மாவட்ட போலீஸ் எஸ். பி. யிடம் புகார் மனு கொடுத்தனர் .

சிவகங்கை தெற்கு ஒன்றியச் செயலாளர் செல்வமணி என்பவரின் பெயரில் கொடுத்த மனுவில் கூறியிருப்பதாவது : சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் மீது அவதூறு ஏற்படுத்தும் வகையிலும் , சகோதர மனப்பான்மையுடன் இருந்து வரும் முக்குலத்தோர் சமுதாயத்திற்குள் பிரிவினையை ஏற்படுத்தி கலவரத்தை தூண்டும் விதமாக விளம்பர நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளது .

இந்த சுவரொட்டியை சிவகங்கை ஒன்றியம் கூத்தாண்டான் என்ற ஊரைச் சேர்ந்த எஸ் . மாரிமுத்து ( ஓ.பி.எஸ்.அணி ) என்பவர் ஒட்டியுள்ளார் இவர் தனது முகநூல் பக்கத்திலும் மோதலை தூண்டு வகையில் பதிவுகளை வெளியிட்டு இருக்கிறார் .எனவே இவர் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும் . இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

# பதஞ்சலி மூலம் நீரிழிவுக்கான இலவச 5 நாள் யோகா முகாம்




சென்னை :

“சர்க்கரை நோயாளிகளுக்கான 5 நாள் ஒருங்கிணைந்த இலவச யோகா முகாம் டிசம்பர் 25 முதல் 29, 2024 வரை, வேப்பேரியில் உள்ள அகர்வால் வித்யாலயா மற்றும் ஜூனியர் கல்லூரியில் காலை, மாலை இரண்டு வேளையும் நடைபெற்றது.

இது ஹரித்வாரில் உள்ள பதஞ்சலி யோகபீடத்தைச் சேர்ந்த பூஜ்ய ஸ்வாமி ரித்தேவ் மகாராஜ் நடத்தப்பட்டது. நேற்று நிறைவு விழா நடைபெற்றது. சென்னையில் பல்வேறு பகுதிகளில் இருந்து சுமார் 500 பேர் முகாமில் கலந்து கொண்டனர். முகாமின் போது, கஷாயம், சர்க்கரை நோய் எதிர்ப்புச் சாறு, முளைத்த வெந்தயம், மருந்து கலந்த காற்று, பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்பட்டது.

முகாமில் கலந்து கொண்ட ஒரு சில நீரிழிவு நோயாளிகள் தங்கள் கருத்தைத் தெரிவித்தனர், இங்கு செய்யப்படும் நடைமுறையின் மூலம் சர்க்கரையின் அளவு கணிசமாகக் குறைந்துள்ளது. சர்க்கரை இல்லாத ஆரோக்கியமான வாழ்க்கையைப் பெற இந்த நடைமுறையை தொடர்ந்து செய்ய வேண்டும் என்று ரித்தேவ் மகாராஜ் வலியுறுத்தினார்,

இதையொட்டி படிப்படியாக நீரிழிவு நோயாளிகளுக்கு செயற்கை மருந்துகளை உட்கொள்வதைத் தவிர்க்க இது உதவும்.

தமிழ்நாடு BST & PYS தலைவர், மகிளா PYS தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



## 2025 புத்தாண்டையொட்டி திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகளுடன் கேக் வெட்டி கொண்டாடினர்

திருவள்ளூர் :

2025 புத்தாண்டு பிறந்ததை அடுத்து தமிழ்நாட்டில் உள்ள மக்கள் ஜாதி மத பாகுபாடின்றி கட்சி வேறுபாடு இல்லாமல் அனைத்து தரப்பு மக்களும் நடனமாடி கேக் வெட்டி உற்சாகமாக வரவேற்றனர், அதனைத் தொடர்ந்து திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் சசிகாந்த் செந்தில், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே அமைந்துள்ள தனது அலுவலகத்தில் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகளுடன் கேக் வெட்டி புத்தாண்டை மகிழ்ச்சியுடன் கொண்டாடினார்.

மேலும் கட்சி நிர்வாகிகள் தாங்கள் குடும்பம் குடும்பமாக எம் பி சசிகாந்தை நேரில் சந்தித்து சால்வை அணிவித்தும், பரிசு பொருட்களை வழங்கியும், புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்த னர். பின்னர் பொதுமக்களை சந்தித்து மனுக்களை பெற்றுக் கொண்டு பெறப் பட்ட மனுக்கள் மீது விரைவில் நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்தார்.

மேலும் இந்த புத்தாண்டு நிகழ்ச்சியானது திருவள்ளூர் நகர தலைவர் பிரேம்ஆனந்த்ஜோஷி தலைமையில் நடைபெற்றது இதில் பேசிய முன்னாள் காங்கிரஸ் கட்சி திருவள்ளூர் வடக்கு மாவட்ட தலைவர் ஏ ஜி சிதம்பரம், மாநிலச் செயலாளர் அஸ்வின்குமார் உள்ளிட்ட காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# திண்டுக்கல் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்களுக்கு முதன்மை தேர்வுக்கு தாட்கோ மூலம் பயிற்சி வழங்கப்பட உள்ளது

திண்டுக்கல் :

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்(தாட்கோ) முன்னணி பயிற்சி நிறுவனம் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்களுக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் TN-PSC Group- II மற்றும் மிமிகி முதன்மை தேர்வுக்கான பயிற்சி வழங்கப்பட உள்ளது.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் Group-II மற்றும் IIA முதல் நிலை தேர்வில் தேர்ச்சி பெற்று முதன்மைத் தேர்விற்கு தயாராகி வரும் மாணாக்கர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இப்பயிற்சியினை பெற பட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்றவர்களும் 21 முதல் 32 வயது நிரம்பிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சார்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

விடுதியில் தங்கி படிக்க வசதியும், பயிற்சிக்கான செலவீனத் தொகையினை தாட்கோவால் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தின்கீழ் பயன் பெற விருப்பமுள்ளவர்கள் www.tahdco.com என்ற தாட்கோ இணையதளத்தில் பதிவு செய்து பயன்பெறலாம், என மாவட்ட ஆட்சித்தலைவர் மொ. நா.பூங்கொடி தெரிவித்துள்ளார்.

# ஃபிஷிங் தாக்குதல்களுக்கு உள்ளாகும் ஆபத்து iOS சாதனங்களில் அதிகரித்துள்ளன: லுக்அவுட்

சென்னை : பாஸ்டனை தளமாகக் கொண்ட லுக்அவுட் ஒரு டேட்டா சென்ட்ரிக் கிளவுட் செக்யூரிட்டி நிறுவனமாகும். இந்நிறுவனம், ஆண்ட்ராய்டை விட iOS சாதனங்கள் ஃபிஷிங் மற்றும் இணைய உள்ளடக்க அச்சுறுத்தல்களுக்கு அதிகம் ஆளாகின்றன என்று ஒரு புதிய ஆய்வு முடிவைத் தெரிவித்துள்ளது. இந்த ஆய்வு காலண்டர் ஆண்டின் (2024) மூன்றாம் காலாண்டை (ஜூலை ஆகஸ்ட்) உள்ளடக்கியது.

லுக்அவுட் அச்சுறுத்தல் ஆய்வகத்தில் உள்ள ஆராய்ச்சியாளர்கள், கடந்த காலாண்டிலிருந்து நிறுவனத்தை மையமாகக் கொண்ட நற்சான்றிதழ் திருட்டு மற்றும் ஃபிஷிங் முயற்சிகளில் 17% அதிகரிப்பு, தீங்கிழைக்கும் பயன்பாட்டு கண்டறிதல்களின் எண்ணிக்கையில் 32% அதிகரிப்பு மற்றும் iOS சாதனங்கள் இவை அதிகமாக இருக்கும் போக்கு உள்ளிட்ட சில கண்டுபிடிப்புகளை வெளியிட்டுள்ளது. ஃபிஷிங் மற்றும் இணைய உள்ளடக்க அச்சுறுத்தல்களுக்கு iOS சாதனங்கள் அதிக ஆபத்தைக் கொண்டுள்ளது இதன் மூலம் தெரிய வந்துள்ளது.

லுக்அவுட்டின் கூற்றுப்படி, 19% நிறுவன வீஎிஷ் சாதனங்கள் 2024 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளில் ஒவ்வொன்றிலும் குறைந்தது ஒரு மொபைல் ஃபிஷிங் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளன.

இதற்கு மாறாக, 2024 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளில், 10.9% நிறுவன ஆண்ட்ராய்டு சாதனங்கள் ஒவ்வொன்றிலும் குறைந்தது ஒரு மொபைல் ஃபிஷிங் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளன என நிறுவனம் தெரிவித்துள்ளது.

சைபர் கிரைம் குழுக்கள் தங்கள் செயல்திட்டங்களை மாற்றிக்கொண்டு, அவர்களின் தாக்குதல்களின் ஆரம்ப கட்டங்களில் மொபைல் சாதனங்களை குறிவைப்பதால், மொபைல் அச்சுறுத்தல் நிலை தொடர்ந்து ஆபத்தான விகிதத்தில் உருவாகி வளர்ந்து வருகிறது, எனலுக் அவுட் தெரிவித்துள்ளது.

# 2025 ஜனவரி 2 அன்று தொடங்குகிறது பரமேஷ்வர் மெட்டல் லிமிடெட்ன் (முதல் பொது பங்கு வெளியீடு) ஐபிஓ

சென்னை: பரமேஷ்வர் மெட்டல் லிமிடெட், 2025 ஜனவரி 2 அன்று தனது முதல் பொது பங்கு வெளியீடு (ஐபிஓ) வழியாக தனது ஈக்விட்டி பங்குகளை பொது தளத்தில் பட்டியலிடும் திட்டத்தை அறிவித்திருக்கிறது.

மும்பை பங்குச் சந்தையின் (BSE) சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்க ளுக்கான (SME) தளத்தில் பங்குகளை பட்டியலிடுவதன் வழியாக 24.74 கோடி ரூபாய் என்ற மூலதனத்தை திரட்ட இந்நிறுவனம் திட்டமிட்டிருக்கிறது.

ஒவ்வொன்றும் ரூ.10 என்ற முகமதிப்புள்ள 40,56,000 என்ற எண்ணிக்கையில் ஈக்விட்டி பங்குகள் இந்த வெளியீட்டில் இடம்பெறுகின்றன.

இந்த புதிய பொது பங்கு வெளியீட்டின் வழியாக கிடைக்கப்பெறும் நிகர மூலதன நிதியானது குஜராத் மாநிலத்தின் காந்தி நகரின் டெக்ஹாம் என்ற இடத்தில் கொத்து கொத்தான காப்பர் வயர் மற்றும் 1.6 மிமீ காப்பர் வயர் உற்பத்திக்கான ஒரு புதிய ஆலையை நிறுவவும், ஃபர்னஸ் (உலைகளம்) சீராக்கப் பணிக்காகவும், நடப்பு மூலதன தேவைகளை எதிர்கொள்ளவும் மற்றும் பொது கார்ப்பரேட் நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படும். இந்த ஐபிஓக்கான ஆங்கர் ஏல புள்ளி செயல்பாடு 2025 ஜனவரி 01 அன்று தொடங்கும் மற்றும் 2025 ஜனவரி 06 அன்று இப்பங்கு வெளியீடு நடவடிக்கை முடிவுற்று வரும்.

இந்த பங்கு வெளியீடு செயல்பாட்டிற்கு முன்னணி மேலாளராக பீலைன் கேபிடல் அட்வைசர்ஸ் பிரைவேட் லிமிடெட்டும் பதிவாளராக லிங்க் இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட்டும் செயல்படும்.

# தனது வலையமைப்பு முழுவதிலும் ஆயுள் காப்பீடு திட்டங்களை வழங்க ஸ்ரீராம் லைஃப் இன்சூரன்ஸ் உடன் இணைந்து செயல்படும் வக்ராங்கி லிமிடெட்

சென்னை : இந்தியாவில் இறுதிநிலை வினியோக செயல்தளங்களுள் மிகப்பெரிய நிறுவனம் என புகழ்பெற்றிருக்கும் வக்ராங்கி லிமிடெட், பிரபல ஆயுள் காப்பீட்டு நிறுவனமான ஸ்ரீராம் லைஃப் இன்சூரன்ஸ் உடன் ஒரு உத்தி வாய்ந்த கார்ப்பரேட் ஏஜென்சி ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுவதை அறிவிப்பதில் பெருமை கொள்கிறது.

நாடெங்கிலும் உள்ள வக்ராங்கி கேந்திரா வலையமைப்புகள் வழியாக ஆயுள் காப்பீட்டின் விரிவான தொகுப்பின் கீழ் திட்டங்களுக்கு எளிதான அணுகுவசதியை வழங்குவதே இக்கூட்டாண்மையின் நோக்கமாகும்.

காப்பீடு திட்டங்கள் வழங்கப்படாத மற்றும் போதுமான அளவு கிடைக்கப்பெறாத பகுதிகளில் அமைந்துள்ள வக்ராங்கி கேந்திராக்கள் இந்த ஆயுள் காப்பீடு திட்டங்களின் பரவலான தொகுப்பை மக்களுக்கு வழங்குவதற்கு இந்த ஒத்துழைப்பு ஏதுவாக்கும். இக்கூட்டாண்மை திறம்பட பயன்படுத்துவதன் வழியாக காப்பீடு தீர்வுகள் எளிதான வழிமுறைகளில் கிடைக்கும் நிலையை மேம்படுத்தி, நிதிசார் பாதுகாப்பை வாடிக்கையாளர்கள் பெற்று பயனடைவதை உறுதி செய்வது இதன் நோக்கமாகும்.

வக்ராங்கி லிமிடெட் – ன் நிர்வாக இயக்குனர் வேதாந்த் நந்த்வானா இக்கூட்டாண்மை செயல்பாடு குறித்து கூறியதாவது: “அத்தியாவசிய தேவைகளின் எமது பெரிய தொகுப்பை மேலும் விரிவாக்குவதற்கு ஸ்ரீராம் லைஃப் இன்சூரன்ஸ் உடன் கூட்டாக இணைந்து செயல்படுவதில் நாங்கள் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

அனைத்து தரப்பு மக்களும் நிதிசார் திட்டங்களின் பலனைப் பெறுமாறு ஒருங்கிணைக்கப்பட வேண்டும் மற்றும் அமைவிடம் எதுவாக இருப்பினும், ஒவ்வொரு இந்தியருக்கும் உயர்தர காப்பீடு திட்டங்களுக்கு இறுதிநிலை அணுகுவசதியை வழங்க வேண்டுமென்ற எமது தொலைநோக்குப் பார்வைக்கு இணக்கமானதாக இத்திட்டம் அமைந்திருக்கிறது.”



# ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தில் வேட்டி வார விழா

திருப்பூர் : ஜனவரி 1 முதல் 7 வரை வேட்டிவாரமாக ஒவ்வொரு வருடமும் ராம்ராஜ் காட்டன் நிறுவனம் கொண்டாடி வருகிறது. இதன் மூலம் மக்களிடையே வேட்டி அணிவது குறித்த மதிப்பையும் கலாச்சார பண்பாட்டினையும் தொடர்ந்து பின்பற்றுவதற்கான ஒரு வாய்ப்பாக இந்த விழாவினை ராம்ராஜ் காட்டன் கொண்டாடி வருகிறது.

அதன்படி 2025 ஜனவரி 1ஆம் தேதி ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தில் வேட்டி வார விழா நிறுவனர் கே ஆர் நாகராஜன் அவர்கள் தலைமையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. தலைமை அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் அனைவரும் வெண்மை நிற வேட்டி சட்டை அணிந்து வந்து வேட்டி வார விழாவினை சிறப்பித்தனர்.

ஒட்டுமொத்த அலுவலர்களும் வேட்டி சட்டை அணிந்து வந்தது கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

# பதிவுத் தேதியான டிசம்பர் 27 கடந்திருப்பதால் போனஸ் பங்குகளின் மதிப்பில்லாமல் ஹார்டுவின் இந்தியா லிமிடெட் – ன் பங்குகள் வர்த்தகம்

சென்னை: கட்டிடக்கலை தொடர்பான வன்பொருள் மற்றும் கண்ணாடியிலான பொருத்தும் பொருட்கள் துறையில் முதன்மை நிறுவனமாகத் திகழும் ஹார்டுவின் இந்தியா லிமிடெட், அது முன்பு அறிவித்திருந்த 02:05 போனஸ் வெளியீடு என்ற பதிவுத்தேதி டிசம்பர் 27 அன்று கடந்திருப்பதால், இப்போது போனஸ் பங்குகளின் மதிப்பில்லாமல் (எக்ஸ் போனஸ்) பங்குகள் வர்த்தகத்தை செய்ய தொடங்கியிருக்கிறது.

குடியிருப்பு மற்றும் வர்த்தகப் பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் ஆகிய இரண்டிற்கும் விரிவான சிறந்த தீர்வுகளை வழங்குவதில் ஹார்டுவின் பெருமை கொள்கிறது. நேர்த்தியான செயல்பாடு மீதான இதன் தளராத பொறுப்புறுதி, வாடிக்கையாளர் நலனை மையமாகக் கொண்ட கோட்பாட்டிலிருந்து உருவானதாகும்; உலகத்தரத்தில் தரமான தயாரிப்புகளை வழங்குவதில் இது கொண்டிருக்கும் விடாப்பிடியான முயற்சியில் இது வெளிப்படுகிறது.

இந்நாட்டில் அதிவேகமாக வளர்ச்சியடைந்து வரும் சந்தை வாய்ப்புகளை சிறப்பாக பயன்படுத்திக்கொள்வதற்கு இந்நிறுவனத்தின் வளர்ச்சி உத்திகள் பெரிதும் உதவுகின்றன. உலகளாவிய சந்தையில் இது செயலிருப்பை வலுவாக்கவும் மற்றும் சந்தைகள் வழங்கும் சாத்தியத்திறனை இலாபகரமாக பயன்படுத்திக் கொள்ளவும் சிறப்பான இடத்தில் இந்நிறுவனத்தின் செயல்உத்திகள் இதனை நிலைநிறுத்துகின்றன.

ஹார்டுவின் இந்தியா லிமிடெட் – ன் நிர்வாக இயக்குனர் திரு. ரூபல்ஜீத் சிங் சாயல் பேசுகையில், “இந்தியாவைச் சேர்ந்த ஹார்டுவின் இந்தியா லிமிடெட் மற்றும் பூட்டான் நாட்டைச் சேர்ந்த தி கியால்சங் இன்ஃப்ரா நிறுவனமும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கின்ற என்பதை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். பூட்டான் நாட்டின் கியால்சங் இன்ஃப்ரா நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் புதிய செயல்திட்டங்கள், கட்டுமானப்பணிகள் மற்றும் பழைய கட்டுமானப் பணிகளுக்கான புதுப்பித்தல் பணிகளில் பயன்படுத்தவிருக்கும் கட்டிடக்கலை சார்ந்த வன்பொருட்கள் மற்றும் கிளாஸ் ஃபிட்டிங் தயாரிப்புகள் அனைத்தும் ஹார்டுவின் இந்தியா லிமிடெட் நிறுவனத்தால் சப்ளை செய்யப்படும்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி 2 ஆண்டுகள் கால அளவிற்கு இந்த புராடக்ட்கள் வழங்கப்படும் மற்றும் இவைகளின் மதிப்பு, உத்தேசமாக ரூ.5 கோடியாக இருக்கும். இந்த புதிய முன்னேற்றம் குறித்தும், எமது பிசினஸ் மற்றும் அக்கறைப் பங்காளர்கள் மீது இது ஏற்படுத்தவிருக்கும் நீண்டகால நேர்மறை தாக்கம் குறித்தும் நாங்கள் மகிழ்ச்சியும், உற்சாகமும் கொள்கிறோம்.

நாங்கள் சேவையாற்றும் சமூகங்கள் மீதும் மற்றும் எமது பிசினஸ் மீதும் இது நேர்மறை தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால், இந்த ஒத்துழைப்பு செயல்பாட்டை நாங்கள் ஆவலோடு எதிர்நோக்குகிறோம்.” என்று கூறினார்.

# சிவகாசி ஆனைகுட்டம் அணைக்கு வந்தது 2 புதிய ஷட்டர்கள்: சிவகாசி எம்எல்ஏ ஆய்வு



சிவகாசி : சிவகாசி அருகே ஆனைகுட்டம் அணையில் உள்ள ஷட்டர்கள் அமைத்து பல வருடங்கள் ஆனதால் பழுதடைந்து, தண்ணீர் தேங்காமல் அணையின் மதகு வழியே வெளியேறுவதால், மழை பெய்தும் தண்ணீர் யாருக்கும் பயன்படாத நிலையில் இருந்தது. இந்த அணைக்கட்டில் தண்ணீர் தேக்கி வைத்தால், சிவகாசி பகுதிகளுக்கு நீர் பிடிப்பு ஏற்படுவது உடன், விருதுநகர் நகராட்சி பகுதிகளுக்கு குடிநீர் தேவைகளையும் நிறைவு செய்கிறது.

சமீபத்தில் இந்த அணையை பார்வையிட்ட அமைச்சர்கள் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, அணையின் பயனை கருத்தில் கொண்டு தமிழக அரசின் சார்பில் 28 கோடி மதிப்பீட்டில் அணையை சரி செய்ய ஷட்டர் தயாரிக்கும் பணியை முடுக்கிவிட்டது. ஷட்டர் தயாரிக்கும் பணியை ஆய்வு செய்த சிவகாசி எம்எல்ஏ அசோகன் கடந்த மாதம் திருச்சிக்கு சென்று வந்த நிலையில், தற்போது அந்தப் பணி நிறைவடைந்து திருச்சியிலிருந்து ஆனை குட்டம் பகுதிக்கு இரண்டு புதிய ஷட்டர்கள் லாரிகளில் வந்து இறங்கியதை சிவகாசி எம்எல்ஏ அசோகன் பார்வையிட்டு, ஷட்டர்களை நிர்மாணிக்கும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறார்.

அணைக்கட்டு பகுதிக்கு வந்து இறங்கிய ஷட்டர்களை பார்வையிட்ட பொதுமக்களும் விரைவில் தண்ணீர் பிரச்சனை தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கை உள்ளனர்.



## நாகப்பட்டினம் மாவட்ட

# ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

நாகப்பட்டினம் : நாகப்பட்டினம் மாவட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் ப.ஆகாஷ் தலைமையில் நடைபெற்றது.

பிரதம மந்திரியின் விவசாயிகளுக்கான கௌரவ நிதித்திட்டத்தின் கீழ் விவசாய குடும்பத் திற்கு மூன்று தவணையாக தலா ரூ.2000 வீதம் ஆண்டிற்கு ரூ.6000 வழங்கப்பட்டு வருகிறது. அடுத்தடுத்த தவணைத் தொகைகளை தொடர்ந்து பெறுவதற்கு வங்கி கணக்கு எண்ணுடன் ஆதார் எண்ணை இணைப்பது கட்டாயமாகும். வங்கி கணக்கு எண்ணுடன் ஆதார் எண்ணை இணைக்காத பயனாளிகள் தங்களுக்கு அருகிலுள்ள இந்தியா போஸ்ட் பேமெண்ட் வங்கியில் சேமிப்பு கணக்கு துவங்கிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாநில வேளாண் வளர்ச்சித் திட்டம் ரூ 202425 திட்டத்தின் கீழ் 2024 25ஆம் ஆண்டில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு மாற்று பயிராக பயறு வகை, சிறுதானியம் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்களை சாகுபடி செய்வதற்கு ஏக்கருக்கு ரூ.1200க்கு ஊக்கத்தொகையாக வழங்கப் படுகிறது. மேலும் ஜிப்சம் மற்றும் துத்தநாக சல்பேட்டுக்கு ஏக்கருக்கு ரூ.250 வீதம் மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத் தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் “உழவன் செயலி” மூலமாக முன்பதிவு செய்து (அல்லது) வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்களை தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ரா.பேபி, முதுநிலை மண்டல மேலாளர் சிவப்பிரியா, நாகப்பட்டினம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் எஸ்.கண்ணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) வே.தேவேந்திரன், கூட்டுறவுத் துறை இணை பதிவாளர் அ.தயாளன், அரசு அலுவலர்கள், மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# சென்னை – பினாங்கு இடையிலான புதிய விமான சேவையை பினாங்கு வரவேற்று உள்ளது

மதுரை : சென்னையில் இருந்து பினாங்கு இண்டிகோ நிறுவனத்தின் நேரடி விமான சேவையை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதற்கு பினாங்கு மாநாடு மற்றும் கண்காட்சி பணியகம் மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் தேதி முதல் இந்த விமான சேவையை தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த புதிய விமான சேவை மூலம் இந்தியா பினாங்கு இடையிலான உறவை வலுப்படுத்துவதில் புதிய மைல்கல்லை அடைந்துள்ளது. இந்த புதிய விமான சேவையின் மூலம் பினாங்கு மாநாடு மற்றும் கண்காட்சி பணியிடத்துக்கான தொடர்பை மேம்படுத்துவதற்கும், இரண்டு பிராந்தியங்களுக்கும் இடையிலான நெருக்கமான உறவுகளை மேலும் வலுப்படுத்தவும் இந்த முயற்சி பயனுள்ளதாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னைபினாங்கு நேரடி வழிக்கு கூடுதலாக, இண்டிகோ மதுரையிலிருந்து சென்னை வழியாக பினாங்குக்கு விமானங்களை இயக்கும், தென்னிந்தியாவில் இருந்து வரும் பயணிகளுக்கு பினாங்கு இன்னும் அதிக அணுகுமுறைக்கு வழி வகுக்கிறது. 30 கிலோ பேக்கேஜ் அலவன்ஸ் உட்பட, மிஜிஸ் 12,300 முதல் ஒரு வழிக் கட்டணத்தை பயணிகள் அனுபவிக்க முடியும்,

இந்த விமானங்கள் ஓய்வு மற்றும் வணிகப் பயணிகளுக்கு கவரும் வகையில் அமைகிறது. சென்னையிலிருந்து புதிய நேரடி விமானம் மதுரையிலிருந்து இணைக்கும் பாதையை இந்தியாவுடன் பினாங்கின் சுற்றுலா மற்றும் பொருளாதார உறவுகளை வலுப்படுத்த தயாராக உள்ளன. பினாங்கின் வளமான பாரம்பரியம், ஆற்றல்மிக்க கலாச்சாரம் மற்றும் வளமான வணிகச் சூழலை அனுபவிக்க விரும்பும் பயணிகளுக்கு அவை அதிக வசதியை வழங்குகின்றன.

இந்த மேம்பட்ட இணைப்பு பினாங்கின் வணிக நிகழ்வுகள் துறையின் வளர்ச்சிக்கு மேலும் ஊக்கமளிக்கும் என்று நிசிணிபி எதிர்பார்க்கிறது, இது சர்வதேச மாநாடுகள், கண்காட்சிகள் மற்றும் பெருநிறுவன நிகழ்வுகளுக்கான முதன்மை மையமாக இலக்கின் நிலையை உறுதிப்படுத்துகிறது.

## பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை வட்டம்

# தொண்டமாந்துறை (மேற்கு) கிராமத்தில் 8ம் தேதி ஆட்சித்தலைவர் தலைமையில் மக்கள் தொடர்புத் திட்ட முகாம்

பெரம்பலூர் : பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், தொண் டமாந்துறை (மேற்கு) கிராமத்தில் 08.01.2025 (புதன் கிழமை) அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் மக்கள் தொடர்புத் திட்ட முகாம் நடைபெற உள்ளது.

அதற் காக பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெறும் பணி தற்போது நடை பெற்று வருகிறது. எனவே, தொண்டமாந் துறை (மேற்கு) மற்றும் அதனைச் சுற்றி யுள்ள கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் தங்களது கோரிக்கைகள் தொடர்பான மனுக் களை தொண்டமாந்துறை (மேற்கு) கிராம நிருவாக அலுவ லகத்தில், முகாம் நடை பெறும் நாளிற்கு முன்னதாகவே வரு வாய்த்துறை அலுவலர்களிடம் அளித்து பயன்பெறுமாறு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது.



ராமநாத புரம் மாவட் டம் ஏர்வாடி ஊராட்சிக்கு உட்பட்ட பகுதியான பனையடி ஊரணியில் 45 வயசுயான ஆண் சடலம் தண்ணீரில் மிதந்தது தகவல் அறிந்த காவல்துறையினர் மற்றும் தீயணைப் புத்துறை நிலைய அலுவலர் அருள்ராஜ் தலைமையில் தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறையினர் ஆண் சடலத்தை கைப்பற்றி கீழக்கரை அரசு மருத்துவ மனைக்கு பிரேத சோதனைக்கு அனுப்பி வைத்தனர் போலீசார் மேல் விசாரணை செய்து வருகின்றனர்..

வணக்கம் தமிழகம்

வெள்ளிக்கிழமை 3.1.2025



சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட 44 மாநகராட்சி வார்டுகளில் அமைப்பு ரீதியாக உள்ள 83 வட்டங்களில் மக்கள் தேவைகளை கண்டறியும் பயணத்தின் தொடக்கம் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், அமைச்சருமான பி.கே.சேகர்பாபு முன்னிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா ராஜன் தலைமையில் வார்டு 70 மற்றும் 74க்குட்பட்ட பகுதிகளில் இன்று தொடங்கி வைக்கப்பட்டு, பொதுமக்களின் கோரிக்கைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# மதுரை விநாயக் பயிற்சி மற்றும் கல்வி நிறுவனத்தின் நிறுவனர் முரளி மணிரங்கராஜின் வாழ்க்கைக் கதை



மதுரை காமராஜர் சாலையில், நீட், ஜே.இ.இ., தேர்வுகளுக்கான பயிற்சி மையமான விநாயக் பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் மதுரையில் நீட் மற்றும் ஜே.இ.இ., தேர்வுகளுக்கு பல்வேறு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு பயிற்சி அளித்து வருகிறது. இந்நிறுவனம் மாணவர்களுக்கு நுழைவு தேர்வுகளுக்கான பயிற்சி அளிப்பதோடு மட்டுமல்லாமல், மதுரை மாவட்டத்தில் பல்வேறு பள்ளிகளில் மாணவர்களின் வாசிக்கும் திறன மேம்படுத்த செய்தித்தாள்களை இலவசமாக வழங்கி வருகிறது.

கடந்த 22ம் தேதி, இந்நிறுவனம், சென்னையில் நடைபெற்ற “Youngsters Time Organization” என்ற அமைப்பு நடத்திய “தமிழ்நாடு பிசினஸ் ஐகானிக் அவார்டஸ்” என்ற விருது வழங்கும் விழாவில் “தமிழ்நாட்டின் சிறந்த சமூக விழிப்புணர்வு மற்றும் புத்தாக்க நிறுவனம்“ என்ற விருதைப் பெற்றுள்ளது.

இந்நிறுனத்தினர் நிறுவனர் மற்றும் இயக்குனர் முரளி தனது வாழ்க்கை பயணம் குறித்து தெரிவிக்கையில், “என் பெயர் முரளி. நான் என் வாழ்க்கையின் உயரங்களையும் தாழ்வுகளையும் கற்றுக் கொண்ட ஒரு சாதாரண மனிதன். என் பயணம் எஞ்சினியரிங் மற்றும் விங்கி முடித்த பிறகு துவங்கியது. நான் சிறுவயதிலேயே என் அப்பாவை இழந்தேன். அவர் ஒரு மிலிடரி வீரர், நேர்மையானதும் தைரியமானதும். என் அம்மா ஹெல்த் டிபார்ட்மென்டில் பணிபுரிந்தார்.

நான் சென்னையில் மிஜி துறையில் ஒரு வெற்றிகரமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தேன். என்னுடைய கனவுகளுக்கு உதவியாகவும், குடும்பத்தின் கற்றை தூக்கியாகவும் இருந்தது. ஆனால், ஒருநாள் ஒரு அழைப்பு என் வாழ்க்கையை முழுமையாக மாற்றி விட்டது.. அம்மாவுக்காக யுத்தம்: அந்த அழைப்பில், எனது அம்மாவுக்கு புற்றுநோய் இருப்பது உறுதியாகத் தெரிய வந்தது. நான் எந்த வித தயக்கமுமின்றி என் வேலைவிடை துறந்து, முழுநேரமாக அவர்களை பராமரிக்க சென்று விட்டேன். அதற்கு பிறகு என் வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் ஒரு போராட்டமாக




மாறியது. அவள் சிகிச்சைக்காக நான் ஒவ்வொரு முடிவையும் எடுத்து அவருக்கு துணையாக இருந்தேன்.

ஆனால், என் போராட்டங்களும் தாய் இயற்கையின் அழைப்பையும் தடுக்கவில்லை. திடீரென அவர்களின் நிலை மோசமடைந்து, அவர்கள் என்னை விட்டு பிரிந்துவிட்டனர். நான் அந்த வெற்றிடத்தை கையாள முடியாமல் தவித்தேன். அவர்களின் பிரிவுக்குப் பிறகு, நான் புதிய பாதையை தேடத் தொடங்கினேன். தொழில் தொடங்க வேண்டும் என்ற ஆசையுடன் பல முயற்சிகளை செய்தேன். ஆனால், சுயதொழில் எளிதாக இல்லை என்பதையும் உணர்ந்தேன். தோல்விகள் எனது வாழ்க்கையில் அடிக்கடி வந்தபோதும், அவற்றிலிருந்து கற்றுக் கொண்டு நான் முன்னேறினேன்.

சில காலத்திற்கு பிறகு, விழிசி நிறுவனத்தில் நான் மீண்டும் வேலை செய்ய ஆரம்பித்தேன். அதே நேரத்தில் என் திருமண வாழ்க்கையும் தொடங்கியது. கடவுள் எனக்கு இரண்டு அழகான பிள்ளைகளை அருளினார். நான் அவர்களோடு ஒரு வழக்கமான வாழ்க்கையைத் தொடங்கினேன்.

கடந்த ஆண்டு, நான் என் வாழ்க்கையின் மிகப் பெரிய முடிவெடுத்து Vinayak Institute and Training Education எனும் கல்வி மற்றும் பயிற்சிக் மையத்தை தொடங்கினேன். இந்த பயணத்தின் ஒரு முக்கிய அம்சம் என்னவென்றால், இது ஒரு சாதாரண முயற்சி அல்ல. இது எனது வாழ்க்கையின் நோக்கம். இந்த பயணத்தில் நான் ஜெய்ப்பேனா தோற் பேனா என்பது முக்கியமல்ல. என்னிடம் ஒரு உறுதி உள்ளது: ஜெயிக்கும் வரை நான் போராடுவேன்.

இந்த கதையைச் சொல்லும் நோக்கம், என் வாழ்க்கை ஏதோ சாதனையாகவே உள்ளது என் பதற்காக அல்ல. இது உங்களை ஊக்குவிக்கவும், உங்கள் வாழ்க்கையில் நீங்கள் பல மாற்றங்களைச் செய்ய முடியும் என்பதையும் நம்பிக்கையையும் வழங்குவதற்காகவே” என தெரிவித்தார்.

# அஞ்சுகிராமம் திமுக பிரமுகர் ஆட்டோ சொர்ணப்பனுக்கு நெல்லையில் “சிறந்த சேவைச்செம்மல்” விருது



நெல்லை :

தூத்துக்குடி முத்துநகர் மக்கள் எழுச்சி அறக்கட்டளை மற்றும் மக்கள் உரிமைகள் பாதுகாப்பு இயக்கமும் இணைந்து பல்வேறு துறைகளில் சாதனை புரிந்தவர்கள் மற்றும் சமூக சேவை செய்து வருபவர்களை தேர்வு செய்து அவர்களை ஊக்கப்படுத்தி, கௌரவப்படுத்தும் விதமாக அவர்களுக்கு பல்வேறு விருதுகள் வழங்கி வருகின்றனர்.

அந்த வகையில் குமரி மாவட்டம் அஞ்சுகிராமம் பேரூராட்சிக்கு உட்பட்ட ஜேம்ஸ்டவுண் பகுதியைச் சேர்ந்த திமுக பேரூர் துணைச் செயலாளரும், சமூக சேவகருமான ஆட்டோ சோர்ணப்பன் தேர்வு செய்யப்பட்டு அவருக்கு விருது வழங்கும் நிகழ்வு நெல்லை மாவட்டத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் லிட்டில் பிளவர் குழுமம் கல்வித்தந்தை மரிய சூசை தலைமையில் முத்துநகர் அறக்கட்டளை நிறுவனர் சக்திவேல், மக்கள் உரிமைகள் பாதுகாப்பு இயக்கத்தின் நிறுவனர் பாலசுப்பிரமணியன், நிர்வாக குழு தலைவர் நைனா முகமது ஆகியோர் சொர்ப்பனின் சிறந்த சமூக சேவைகளுக்காக அவரை தேர்வு செய்து அவருக்கு “சிறந்த சேவைச்செம்மல்” விருது வழங்கி பாராட்டி கௌரவப் படுத்தினர்.

# மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட ஆரோக்கியநாதபுரத்தில் வேதநாயகம் அரங்கம் கட்டப்பட்டு வருவதை மாவட்ட ஆட்சியர் செய்தியாளர்களுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்



மயிலாடுதுறை :

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் சட்டமன்ற அறிவிப்பின்படி, தமிழில் முதல் நாவல் எழுதிய மாயூரம் முன்சீப் வேதநாயகம் அவர்களுக்கு ரூ.3 கோடி மதிப்பீட்டில் அரங்கம் மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட ஆரோக்கிய நாதபுரத்தில் 884 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்டு வருகிறது. இவ்வரங்கமானது அரங்கம், உணவு கூடம், கூடம், கழிவறை உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறது.

இதனை மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டு, பணிகளின் தரத்தினை ஆய்வு செய்தார். கட்டுமான பணிகளை தரமானதாக மேற்கொள்ள வேண்டும் என பொதுப்பணித் துறை செயற்பொறியாளருக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, கிட்டப்பா நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு மாணவ, மாணவிகளுடன் மாவட்ட ஆட்சியர் அவர்கள் கலந்துரையாடி, ஒரு மதிப்பெண் மற்றும் இரு மதிப்பெண் வினாக்களை பாடங்கள் வாரியாக கேட்டறிந்தார். பொதுத்தேர்விற்கு முழுமையாக தயார்படுத்திக் கொள்ள வேண்டும். கல்வி ஒன்றே மகத்தானது. அதனை திறம்பட கற்று மேன்மேலும் வாழ்க்கையில் உயர வேண்டும் என மாணவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அறிவுரை வழங்கினார்.

ஆய்வின் போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கோ.ஸ்டாலின், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் பால ரவிக்குமார், உதவி செயற்பொறியாளர் ராமர், மயிலாடுதுறை வட்டாட்சியர் விஜயராணி ஆகியோர் உடன் இருந்தனர்.



# ஜெயங்கொண்டத்தில் சௌமியா அன்புமணியை விடுதலை செய்யக்கோரி பாமக சார்பில் ஆர்ப்பாட்டம்

ஜெயங்கொண்டம் :

சென்னையில் அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமைக்கு ஆளான மாணவிக்கு நீதி கேட்டும் தமிழக அரசை கண்டித்தும் நடைபெற்ற பாட்டாளி மக்கள் கட்சியின் மகளிர் அணி சார்பாக நடந்த ஆர்ப்பாட்டத்தில் சௌமியா அன்புமணி கைது செய்ததை கண்டித்து அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டத்தில் பாமக சார்பில் மாவட்ட செயலாளர் தமிழ் மறவன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது .

இதில் பாமக மாநில அமைப்பு தலைவர் டி எம் டி திருமாவளவன் முன்னிலை வகித்தார் இதில் பாமக நிர்வாகிகள் எம் கே ஆர் ராஜேந்திரன், ராமதாஸ், ராமநாதன் தங்கராசு அருண்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் நகர செயலாளர் பரசுராமன் நன்றி கூறினார்.



திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், எடமேலையூர் நடுத்தெரு ஊராட்சியில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் புதியதாக கட்டபட்ட நியாய விலைக்கடையினை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா திறந்து வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு உணவுப்பொருட்களை வழங்கினார் . மாவட்ட ஆட்சித்தலைவர் தி.சாருஸ்ரீ ,மாவட்ட ஊராட்சித்தலைவர் கோ.பாலசுப்ரமணியன் ஆகியோர் உடனிருந்தனர்.




தஞ்சாவூர் மாவட்டம் அம்மாபேட்டை ஒன்றியம் கோவத்தக்குடி ஊராட்சியில் மாபெரும் மரக்கன்று நடும் விழாவினை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன் தொடங்கி வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம் , கும்பகோணம் சார் ஆட்சியர் ஹிருத்யா எஸ்.விஜயன், , மாவட்ட ஊராட்சித் தலைவர் ஆர்.உஷா புண்ணியமூர்த்தி , மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் சு.க.முத்துசெல்வம் , அம்மாபேட்டை ஒன்றிய குழுத் தலைவர் கே.வீ.கலைச்செல்வன் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

# தேனி மாவட்ட முன்னாள் படைவீரர்களை சார்ந்தோருக்கு (மகன் மற்றும் மகள்) நான்முதல்வன் திட்டத்தின் கீழ் திறன் பயிற்சி: ஆட்சித்தலைவர் தகவல்

தேனி :

தேனி மாவட்ட முன்னாள் படைவீரர்களை சார்ந்தோருக்கு நான் முதல்வன் திட்டத்தின்கீழ், வேலைவாய்ப்பற்ற 16 முதல் 35 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு மாவட்டத் திறன் பயிற்சி அலுவலகம் வாயிலாக பயிற்சி வழங்கப்பட உள்ளது.

மெஷினிஸ்ட் கிரைண்டர், மேனுபேக்சரிங் பிராசஸ் கண்ட்ரோல் ஆட்டோமேசன் மற்றும் வெல்டர் பயிற்சி வகுப்புகள் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் தேனியிலும், பிட் எலக்ட்ரிகல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் அசெம்பிளி, மேனுபேக்சரிங் ப்ராசஸ் கண்ட்ரோல் மற்றும் ஆட்சோமேசன் பயிற்சிகள் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம்போடிநாயக்கனூரிலும்,கோபா மற்றும் கேண்ட் எம்பராய்டரி பயிற்சிகள் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், (மகளிர் மட்டும்) ஆண்டிபட்டியிலும், கிரிட்டிக்கல் கேர் நர்சிங், ஜெனரிக் கேர் நர்சிங், ஜெனரல் டியூட்டி அஸிஸ்டண்ட், டையாபெட்ஸ் எஜுகேட்டர் மற்றும் ஆபரேஷன் எக்ஸ்கியுட்டிவ் பயிற்சிகள் நலம் மருத்துவமனை தேனியிலும் நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் சேர விருப்பமுள்ள தேனி மாவட்டத்திலுள்ள முன்னாள் படைவீரர்களின் 16 முதல் 35 வயதுக்குட்பட்ட மகன் மற்றும் மகள் தங்களது கல்விச்சான்று, ஆதார்அட்டை மற்றும் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட அலைபேசி எண் ஆகிய ஆவணங்களுடன் மாவட்டத் திறன் பயிற்சி அலுவலகத்திற்கு நேரில் சென்று தங்களது விருப்பத்தைத் தெரிவித்து பயிற்சியில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர்.வி.ஷஜீவனா தெரிவித்துள்ளார்.



விருதுநகர் மாவட்டம் திருச்சுழி ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட செங்குளம் ஊராட்சியில் வாகைகுளம் கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பாக வைக்கப்பட்டுள்ள தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# விருதுநகர் மாவட்ட மண்டல அளவிலான வேளாண்மை திருவிழாவினை அமைச்சர்கள் துவக்கி வைக்க உள்ளனர்

விருதுநகர் :

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை மண்டல ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் மண்டல ஆராய்ச்சி நிலையம் அருப்புக்கோட்டை இணைந்து நடத்தும், பருவநிலை மாற்றமும், வேளாண் உற்பத்தியும் என்ற தலைப்பில் 04.01.2025 மற்றும் 05.01.2025 ஆகிய இரண்டு தினங்கள் நடைபெற உள்ள மண்டல அளவிலான வேளாண்மைத் திருவிழாவினை அமைச்சர் / தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இணை வேந்தர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் அமைச்சர் .தங்கம் தென்னரசு ஆகியோர் 04.01.2025 அன்று காலை 11.00 மணியளவில் துவக்கி வைக்க உள்ளனர்.

இந்த இரண்டு நாட்கள் நடைபெறும், மண்டல அளவிலான வேளாண்மைத் திருவிழாவில், வேளாண்மைத் தொடர்பான கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்;கு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. எனவே, மண்டல அளவிலான வேளாண்மைத் திருவிழாவில் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் கேட்டுக்கொண்டுள்ளார்.